[illegible]

[illegible] 1 [illegible] 3

[illegible] 1928.

JL
R673 [illegible] 28
N2 [illegible]
187118

1856 tered No. M. 2330.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

'எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே'


| | | |
|---|---|---|
| மலர் க | பிரபவஞு மாசி மீ—1928 ஞு மார்ச்சு மீ | இதழ் ௩ |


உள்ளுறை — பக்கம்


| | |
|---|---|
| சைவ பரிபாலனம் ... ... ... ... | 49 |
| எரி நிறைந்தனைய செல்வன் ... ... ... | 53 |
| சமய உணர்ச்சி வரலாறு ... ... ... ... | 59 |
| கறைக்கண்டனுக்கு மூத்தவன் ... ... | 63 |
| நம்பியாரூரர் தேவாரம் ... ... ... | 66 |
| சைவ சித்தாந்த மகாசமாஜம் ... ... | 71 |
| 'சித்தாந்தம்' வாழ்த்து ... ... ... | 72 |


26 MAR 1928


பத்திராசிரியர்

மணி. திருநாவுக்கரசு முதலியார்,

ஆசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

உதவிப் பத்திராசிரியர்

வித்துவான்

பாரிப்பாக்கம் - கண்ணப்ப முதலியார்



சைவ சித்தாந்த மகாசமாஜ காரியாலயம்,

92, வரதா முத்தியப்பன் தெரு,

சென்னை.

1928

# அறிக்கை

“சித்தாந்தம்” பத்திரிகை மீண்டும் வெளிவந்ததைப் பாராட்டி நாடோறும் பல கடிதங்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. அவைகளுக்குத் தனித் தனியே பதில் விடுக்க இயலவில்லை. பல அன்பர்கள் பற்பல நண்பர்களை அங்கத்தினராகச் சேர்த்துச் சந்தாக்களையும் முன்பணமாக வசூலித்துச் சமாஜ ஆபீசுக்கு அனுப்பி வருகிறார்கள். அத்தகைய பெரும் புண்ணிய சீலர்கட்கு இச்சமாஜம் எஞ்ஞான்றும் நன்றியுடையதாகும். அவர்களைப் போல் ஏனைய அங்கத்தவரும் தங்கள் சந்தாவை இவ்வறிக்கை கண்டவுடன் காரியதரிசி விலாசத்துக்குச் செலுத்துவதோடு பல அங்கத்தினரைச் சேர்த்து அவர்கள் சந்தாக்களையும் முன்பணமாக அனுப்பிச் சிவ புண்ணியத்தில் ஈடுபடுவார்களென எதிர்பார்க்கிறோம். ஆயுள் அங்கத்தவரைச் சேர்த்தல், வர்த்தக விளம்பரங்களைப் பத்திரிகைக்கு அனுப்புதல் முதலிய சிறந்த பொருளுதவிபுரிதல் பெரிதும் சிறப்புடையது. சமாஜத்தின் பல நோக்கங்களும் இனிது கைகூடுமாறு பொருளுதவி புரிந்து சமாஜத்தினருக்கு உவகையும் ஊக்கமும் அளித்து சமாஜத் தொண்டுகள் பலவும் செவ்வனே நடைபெறுமாறு செய்தல் சைவர்களின் முதற்கடமையெனா அறிவிக்கவும் வேண்டுமோ ?

ம. பாலசுப்பிரமணியன்,
காரியதரிசி.

## பிழை திருத்தம் (2-ம் இதழ்)

| | |
|---|---|
| S. P. சிவஞான முதலியார் | P. S. |
| A. V. முத்தையா செட்டியார் | முதலியார். |
| C. ரத்தினசபாபதி முதலியார் | C. S. இரத்தினசபாபதி முதலியார். |
| T. V. வே. உமாமஹேஸ்வரம் பிள்ளை | T. V. உமாமஹேஸ்வரம் பிள்ளை. |

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

REGISTRAR OF BOOKS
26 MAR 1928
MADRAS

"எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே"

| மலர் க | பிரபவ ஹு மாசி மீ<br>1928 ஹு மார்ச்சு மீ | இதழ் ரு |
|---|---|---|

## சைவ பரிபாலனம்

[பத்திராசிரியர்]

---

நாகரிகத்திற் சிறந்து விளங்கும் மக்கள் எல்லாரும் தமது உடம்பைப் பேணி வளர்த்தலே போல அறிவையும் உயிரையும் வளர்த்து வருகின்றனர். உயிர் வளர்த்தலே சமய வளர்ச்சியாகும். சமயத்தைப் போற்றுவது ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத கடமையாம். சைவராகிய நாமோ நமது சமயத்தைப் பிறரைப் போலப் புரத்தலின்றி வாளா உறங்கிக் கிடக்கின்றோம். நமது தூக்கம் நம்மை எத்துணைக் கீழே நூக்கிவிட்டதென்பதையும் உணராமலும் உணர விருப்பமின்றியும் இருக்கின்றோம். சைவசமயத்தைப் பற்றிய கொள்கைகள் இன்னின்ன என்று பொதுவாகவாதல் சைவர் ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள வேண்டாமா? திருநீறு ஏன் பூசவேண்டும்? கோயில்களின் அமைப்பு என்னை? என்றாதல் தெரிந்துகொள்ள வேண்டாமா? சைவ குரவர் இன்னார் என்பதும் சைவருள் மிகப் பலருக்குத் தெரியாது; சித்தாந்த நூல்கள் இன்னின்ன என்பதையும் பலர் அறிந்திலர். பன்னிரு திருமுறைகளின் பெயர்களையும் உணரார் பலர். சில சபையார் திருமுறை விழாவிலே, வடிவிலே பெரியவையாகவுள்ள பிற புத்தகங்களை திருமுறைகளோடு அடுக்கி வைத்து விழவாற்றியதையும் நேரிற் கண்டுள்ளோம்.

இன்னும் திருமயிலையில் நடைபெறும் அறுபத்துமூவர் விழாவிலே காரைக்காலம்மையார் திருவுருவைக் கண்டு, "இவ்வம்மை அறுபான் மும்மைப் புதல்வரை ஈன்றனள்; இனி ஒரு பெண்ணைப் பெற விழைந்து தவங் கிடக்கின்றாள்," என்று கூறும் பேதையர் எத்தனைபேர்? திருவொற்றியூரின்கண் நிகழும் மகிழடி சேவை செய்யத் திருக்கோயிலிற் சென்று, முன்னரே இடந்தேடிக்கொண்டு தங்கி, அவ்விடத்

திலேயே மலமும் நீரும் கழிக்கும் அன்பர் எத்துணையர்? திருவானைக்காவின் உட்புறத்தே யுள்ள திருக்குளத்திலே காலைக் கழுவியவரைக் கண்ணிற் கண்டதுண்டு. திருவிழாக் காலங்களிலே திருக்கோயில்களைச் சுற்றி இருக்கும் அருவருப்பான காட்சி யாவர் உள்ளத்தைத்தான் வருத்தாது? இவ்வளவு சீர்கேடான நிலைமை ஏன் வந்தது? சைவர் தமது சமயத்தைப் பற்றிய கொள்கைகளை நன்கு பரப்பாமல் இருத்தலானன்றே. கற்ற ஒரு சிலர் சைவத்தைப் பற்றித் தெரிந்துகொண்டு சில காலங்களில் விரிவுரைகள் செய்து விடுவதால் சைவம் பரவி விடுமா? ஒரு சிலர் எவ்வாகம விதிப்படித் தீக்கை பெற்றாரோ அவ்வாகம விதிப்படியே திருநீற்றுப் புண்டரம் தரித்துக்கொண்டு திருக்கோயில் வழிபாடு செய்துவிட்டால் மட்டும் சைவம் பரம்புமா? யாரோ சிலர் திருமுறைகளைப் பண்ணடைவுடன் பாடிவிட்டால் சாலுமா? 'சித்தாந்தம்' என்னும் இப்பத்திரிகை மட்டும் போதுமா? பல படியாலும் சைவர் தமது சமய ஞானத்தைத் தம்முடைய மக்கட்கேனும் புகட்டல் வேண்டும். இல்லாவிட்டால் சைவம் என்பது இன்னதென்றே தெரியாமற் போகும் காலம் வந்துவிடும்.

இப்பொழுது எங்குப் பார்த்தாலும் பகவற்கீதை முழக்கம் கேட்கிறது. காரணம் என்ன? அது நமது சிவஞான போதத்தின் முன்னர் மின்மினி போல்வது. அதன்கணுள்ள பொருள்கள் யாவும் சிவாகமங்களினின்றும் படியெடுத் தெழுதப்பட்டவை என்பதை வீரசைவ நண்பர் ஒருவர் விளக்கி எழுதிய ஆங்கிலப் [illegible] ஒன்றும் கைவரப் பெ[illegible]யக் கற்ற ஒருவன் தத்துவஞான முழுவதையும் உணர்ந்துகொள்ள இயலாது. ஆனால் சிவஞான போதத்தைக் கற்றவொருவனே உலகத்திலேயுள்ள எல்லா ஞானங்களின் முடிவையும் தெளியலாம். இத்தகைய விழுச்சீரைப்பெற்றும் சிவஞான போதத்தின் பெயர் ஏன் பகவற்கீதையைப் போல யாண்டும் திகழவில்லை? காரணம் சைவர் தூக்கமும் பிறர் ஊக்கமுமே யாகும். வியாசர் செய்த பிரமசூத்திரத்துக்கு நீலகண்ட சிவாசாரியார் அருளிச்செய்த சிவாத்துவித பாடியம் ஆங்கில ஆராய்ச்சியாளர்க்கும் தெரியவில்லை. 'திரிமத பாஷ்யம்' என்றே பலரும் வாய்ப்பறை அறைகின்றனர். நீலகண்டர் பாடியம் ஒன்றுண்டென்பதனையே மறைக்கின்றனர் பலர். அதற்காகச் சைவர் என்ன செய்கின்றனர்?

187118

நாலாயிரப் பிரபந்தம் பிராமணர்களால் கோயில்களின் உள்ளும் திருவிழாக் காலங்களில் வெளியே வீதிகளிலும் ஆரிய மறையுடன் ஓதப்பட்டு வருகின்றது. சுபாசுபக் காலங்களிலும் வைணவர் தம் வீடுகளிலே பிரபந்த சேவை செய்கின்றனர். சைவப்பிராமணர் எத்தனை பேர் தமிழ் மறை ஓதி வருகின்றனர். சைவ ஓதுவார் எவ்வளவு பேர் இருக்கின்றனர்?

இதற்குக் காரணம் யாது? தமிழ்த் திருமுறைகளைப் பண்ணுடனேயே பாடவேண்டுமெனச் சைவர் ஒரு தப்பெண்ணத்தை வைத்துக் கொண்டிருத்தலேயாம். பண்ணுடன் பாடுதல் யாவர்க்கும் இயல்வதன்று. அங்ஙனம் செய்வதற்குப் பண்ணில் பழக்கம் வேண்டும்; தாள அறிவைப் பெற வேண்டும்; குரலினிமையும் அமைந்திருத்தல் வேண்டும். இவ்வளவும் பொருந்துதல் அரிது.



சைவர் எல்லாரும், வைணவர் நாலாயிரத்தை ஓதுதல்போல ஏன் ஓதலாகாது? பெரியவர் சிறியவர் கற்றார் கல்லாதார் ஆகிய எல்லோரும் திருமுறைகளை வாயார மனமுருகி ஓதினால் அதனால் ஓதுவாருக்கும், ஓதுதலைக் கேட்டோருக்கும் எவ்வளவு உருக்கமும் அன்பும் உண்டாகும். சைவர் திருவாசகத்தில் உள்ள அடைக்கலப்பத்தை முடிவுக் காலத்திலேயே படிக்கத் தொடங்குகின்றனர்; பிணத்தின் முன்னே கூலி கொடுத்துத் திருவாசகம் பாடச் செய்கின்றனர். இதனால் திருவாசகம் என்ற பொழுதே ஒரு சிலர் 'முடிவு வந்துவிடுமோ' என அஞ்சுகின்றனர். இப்பழக்கத்தை அறவே விடுத்து, எப்பொழுதும் எவ்விடத்தும் யாவராலும், சைவத் திருமுறைகள் ஓதப்படல் வேண்டும் என்னும் பழக்கத்தை உண்டாக்க வேண்டும். இசைப்புலவர் நன்கு தேர்ந்து இசையென்னும் இனிய சுவையுடன் தேவார அமிழ்தத்தை ஒருபால் ஊட்டலாம்; மற்றையோர் உருக்கத்துடன் பாடுதலைக் கைக்கொள்ளவேண்டும்.

சிவாலயங்களிலும் திருமடங்களிலும் வரும் வருவாயைச் சைவப் பிரசார வேலைக்கேனும் செலவிடல் ஆகாதோ? ஒவ்வொரு கோயிலிலும் ஏன் தேவார பாடசாலை வைத்த லாகாது? ஏன் சிவ புராணப் பிரசங்கம் செய்விக்க லாகாது? ஏன் கோயில்களைத் தூய்மையாக வைத்திருத்த லாகாது? பொது மக்கட்குப் பயன்படத் தக்க வேறு விஷயங்களை ஏன் நோக்க லாகாது? இக்காலத்தும், இத்தகைய நன்மைகளை செய்யத் தரும கருத்தர் எவரும் எண்ணி முன்வரவில்லை. பொதுமக்களும் கிளர்ச்சி செய்தல் இல்லை. அரசாங்கத்தார் அமைத்த சட்டமும் போதியதாகக் காணப்படவில்லை.

சிவாலயங்களிலே முன்பெல்லாம் சோற்றுப் பிரசாதங்கள் இல்லை. திருநீற்றுப் பிரசாதமே இருந்தது. சிவதீக்கை பெறுவோர் சிவாலயத்தினின்றும் யாதும் கொள்ளலாகாது என்னும் நெறியும் உளது. அங்ஙனம் விதி இருப்பவும் அதற்கு மாறாக இப்பொழுது சிவாலயங்களும் பிற ஆலயங்கள் போலவே சோற்றுத் துறையிலே துறை போய் உள்ளன. ஏழைமக்கட்குப் பட்டைச் சாதமும் கிட்டுவதில்லை. சைவ தரும கருத்தர் பலர் பொங்கலுக்கு நறுநெய் வரையறுப்பதிலும் வடையின் செய்முறைபற்றியும் சுவையுள்ள புதுப் புதுத் திற்றிகளைச் செய்பாகம் கைப்பாகம் வழுவாமல் சமைப்பிப்பதிலும் முனைத்து நிற்கின்றதைக் காண்கின்றோம்.

சிலர் சிவாலயங்களிலே இல்லாத புதுவழக்கங்களைக் கொணர்ந்து புகுத்திவிட்டனர். குருக்கள் ஒருவரோ அல்லது புலவர் ஒருவரோ ஒரு கோயிலுக்குத் தனிச் சிறப்பு வேண்டுமென்று எண்ணினால் சாலும். எல்லாம் இமைகொட்டுமுன் நிகழ்ந்துவிடும். குருக்கள் ஆகமவிதியைக்கொண்டு வந்து காட்டுவர். புலவர் தலபுராணம் நீட்டுவர்.

இப்பொழுது ஒரு கோயிலிலே நூறு பிள்ளையாரை ஒருங்கே காணும் காட்சியால் இம்மை மறுமை வீடு பேறுகள் எளிதில் கைகூடும் என்றொரு நியாயம் வகுத்துக் குருக்கள் ஒருவர் பிள்ளையார் திருவுருவம் நூறு சமைப்பித்துக் கொண்டு வருகிறார். காஞ்சிபுரத்தின்கண் ஒரு சிவாலயத்திலே சடகோபம் கொண்டுவந்து அன்பர் தலையிலே குருக்

கள் தரித்ததைக் கண்டுள்ளோம். சடகோபம் இன்னது என்பதும் அதற்கும் சைவருக்கும் யாதும் தொடர்பில்லை என்பதும் அன்னார் படியாத பாடங்கள்.

ஓர் ஆலயத்திலே சந்திரசேகரமூர்த்தியின் உருவம் சிறியதெனக் கருதிய கோயிற் குருக்கள் நடராஜரை மறைத்துச் சந்திரசேகரராகக் கொணர்வித்துக் கோலங் காட்டி எக்களித்தனர். அசம்பிரதாய உற்சவங்களும் போலி ஒழுக்கங்களும் இடம்பச் செயல்களும் ஆரவார நாடகக் காட்சிகளுமே ஆலயங்களிலே காணப்படுவதால் உண்மை தெரிந்த அன்பர் சிலர் வெறுப்புற்று ஆலயங்களுக்குப் போதலை அறவே ஒழித்து விடுகின்றனர்.

இவற்றைப் பற்றிச் சைவராகிய நாம் என்ன செய்கிறோம். கோயில்களின் வருவாயைக் கொண்டு செய்யவேண்டுவனவற்றைத் தக்கபடி ஒழுங்காகச் செய்வித்து, எஞ்சிய பொருளைப் பொதுமக்கட்குச் சைவ அறிவு கொளுத்துதற்காகச் செலவிடுவோமானால், இத்தகைய குற்றங் குறைகள் நாளடைவில் ஒழிந்து விடும். இங்ஙனம் செய்யாமல் ‘இராமனாண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன?’ என்று சோம்பேறி ஞானம் பேசிக்கொண்டு இருப்போமானால் நமது சமயம் குன்றிவிடுதல் ஒருதலை.

ஆலயங்கள் இன்ன காரணத்திற்காக அமைக்கப்பட்டன என்றும், இன்னின்ன தத்துவங்களை இனிது விளக்குவன என்றும், அறிவிப்பதில் செலவிடப்படாத கோயிற் பொருள் மற்றெதற்குப் பயன்படற் பாலதென எமக்கு விளங்கவில்லை. கோயில்களிலே வைத்துள்ள மூலதனமும் அவ்வப்போது சேரும் தொகையும் பொதுமக்கள் எல்லாருக்கும் உரியன. நம்முடைய பொருளைச் செலவழிப்பதில் எத்துணைச் செட்டும் நினைப்பும் நமக்கு உண்டாகுமோ அத்துணை, ஆலயப் பொருட் செலவிலும் நமக்கு உண்டாதல் வேண்டும். ஆனால் நம்மவரிற் பெரும்பான்மையோர் இன்னும் தனி நிலையினின்றே பொருளை நோக்குகின்றனரே அன்றிக் கலப்பு நிலையினின்றும் நோக்குகின்றார் இல்லை. கோயில் பொருள் அல்லது மடத்தின் பொருள் எக்கேடு கெட்டாலும் தமது பொருள் வீணே செலவழிக்கப்பட்டதாக அவர் எண்ணுவதில்லை; ஆத்திரங் காட்டுவதும் இல்லை.

சைவ சித்தாந்த மஹா சமாஜத்தை நன்றாக வேரூன்றும்படி செய்துவிட்டால் இதனை நடுக்கழகமாக அமைத்துக் கொண்டு பல அரிய பெரிய காரியங்களை முடித்து விடலாம். இப்பொழுது சென்னைச் சர்வகலா சங்கத்தார் தத்துவ உபந்நியாசங்கள் சிறந்த புலவர்களைக் கொண்டு செய்விக்கின்றனர். அவ்வகையிலே சைவசித்தாந்த தத்துவ உபந்நியாசங்கள் பலவற்றைத் தக்க புலவர்களைக் கொண்டு செய்விக்க வேண்டுமென அச்சங்கத்தாரை நாம் கேட்டுக்கொள்ள வேண்டும். கீழ்நாட்டுப்பட்டப் பரீக்ஷைகளில் ‘சித்தாந்த சிரோமணி’ என்னும் பட்டப் பரீக்ஷையை ஏற்படுத்த வேண்டுமென ஆங்காங்குள்ள சைவ சபைகள் ஓயாமல் கிளர்ச்சி செய்ய வேண்டும்.

சென்னை இராஜதானிக் கல்லூரியிலே தத்துவப் பகுதியிலே சென்ற ஆண்டிலே ஒன்றாகக் கொள்ளப்பட்ட சைவ சித்தாந்தம், வரும் ஆண்டிலே செய்கையிற்பாட அமைப்பிலே வர வேண்டு



மென்றும் அதன் பொருட்டுச் சைவ சித்தாந்தத்திலே வல்லவர் ஒருவரைப் போதகாசிரியராக உடனே ஏற்படுத்த வேண்டுமென்றும் நாம் வித்தியா இலாகா அமைச்சருக்கும் பொதுக் கல்வித்துறைத் தலைவருக்கும் தெரிவித்தல் வேண்டும். இன்னும் இவை போலச் செய்யவேண்டுவன பலவுள. அவற்றை விழிப்பாயிருந்து நாம் அவ்வக் காலங்களில் அதிகாரிகளுக்கு எடுத்துக்காட்டிக் கருமத்தை முடிக்க வேண்டும்.

சைவர்கள் கோயில், மடம், பொது நிலயங்கள், அரசாங்கம் முதலான பல் வேறு இடங்களிலும் திரண்டிருக்கும் பொதுப்பொருளில் தமக்கு நியாயமான உரிமையைப் பெற்றுச் சிறந்த முறைகளை அமைத்துக் கொண்டு சைவபரிபாலனம் செய்வதற்குச் சைவசித்தாந்த மஹா சமாஜமே தக்க வாயிலாகும் என்பதை நன்கு உணர்வாராக. சமாஜம் மேன்மேலும் ஓங்கவேண்டுமாயின் சித்தாந்தத்துக்குக் கையொப்ப நண்பர் பல்லாயிரவராகப் பல்கவேண்டும். சைவநன்மக்களே, நீங்கள் உண்மையாகச் சைவத்தில் பற்றுடையவரானால் காலத்துக் கேற்றவாறு சைவப் பிரசாரம் செய்ய முற்படுமின். நமது உரிமையைப் பெற விழைமின். பல வழியினும் சிதறுண்ட பொருளை ஈட்டுமின். விழிமின்! எழுமின்!

---

## “ஏரி நிறைந்தனைய செல்வன்”

[வல்லை - பாலசுப்பிரமணியன், பீ. ஏ.]

42-ஆம் பக்கத் தொடர்ச்சி

ஓர் எரிமலையினடிவாரத்தில் நிற்போமாகில், நம்மீது சீறி நெருப்பைக் காறி யுமிழ்கின்றது. ஆனால், “அறிவோர்க் கழகு கற்றுணர்ந்து அடங்கல்” என்றவாறு ஆழ்ந்து அகன்ற கல்வியறிவு வாய்க்கப் பெற்றொருவர், தம்மினும் சிறியாரைக் காணுங்கால், தமது பெருமையைக் காட்டாது, தாழ்ந்து போதல் போன்று, ஆழ்ந்து அகன்ற கடல், நாம் அதன் மருங்கு நின்றக்கால், ஒன்றிய உணர்வுடைய அருமைக் காதலி, குனிந்து தன் காதலன் கால்களை நீர்வார்த்துக் கழுவுவது போன்று, தனது நடுவில் பெரிய மலையுயரம் அலைகள் இளம்பினாலும், எம்மைச் சேய்மையிற் பார்த்ததும் சிறிது சிறிதாக அடங்கி மெதுவாக வந்து நமது கால்களை வருடி மீண்டும் செல்கின்றதன்றோ!

இதனை நோக்குங்கால்,

“ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணின் நனிதாழ்ப-தூக்கின்
மெலியது மேன்மே லெழச் செல்லச்செ
வலியதன்றோ தாழுந் துலைக்கு” [ல்ல

என்னும் நீதிநெறி விளக்கப் பாட்டு என் நினைவிற்கு வருகின்றது.

நீர் நிலைகளுக்கு, இத்தகைய பெண்மைக்குரிய குணங்களிருப்பதனாற்றான், அக்குணங்களாகிய கருணை, கல்வி, அறம், மகிழ்ச்சி முதலியவைகளுக்கு வடமொழியிலும், தமிழிலும் கடல் முதலிய நீர் நிலைகளை அடைமொழிகளாக்கிக் கூறுகின்றனர். இதனுண்மை

யினை, ஆநந்த சாகரம், கல்விக் கடல், கிருபா சமுத்திரம், அருள் வாரி, அன்பு வெள்ளம் என வழங்குந் தொடர் மொழிகளானறிக. இதனுட்பத்தினை யறிந்தே, தெய்வப்புலமைத் திருவள்ளுவரும், அறவாழி யந்தணன் என்று எல்லாம் வல்ல இறைவனுக்குப் பெயர் தந்திட்டார். நம் மணிவாசகப் பெருந்தகையாரும், தம்மைப் பண்டொரு நாள், குருந்தமர நீழலில் ஆட்கொண்ட பெருமானை "அழிவிலா ஆநந்த வாரி போற்றி" என்று போற்றித் திருவகவலில் வாழ்த்தியிருத்தல் காண்க. மற்று, எல்லா வுயிர்களிடத்தும் வேறுபாடின்றி அன்பு பூண்டொழுகும் ஒருவனை ஈர நெஞ்சினன் என்று உலகத்தார் வழங்க நாம் நாடோறும் காண்கின்றோம் அல்லமோ?

இனி, நீர் நிலைகளினிருப்பு, அவைகள் இருக்கும் இடத்திற்கு ஒரு புதிய எழிலைத் தருகிறது. "ஆறில்லா ஊருக் கழகு பாழ்" என்று அவ்வையார் சொன்னது போல், ஒரு நகரில் ஆறு, ஏரி, குளம் முதலியன ஏதேனும் ஒன்று இல்லா தொழியுமேல் அந்நகரம் அந்தோ! எத்துணைப் பொலிவிழந்து நிற்கின்றது.

ஆ! யாம் தென்னாடுகளில் காவிரி முதலிய அழகிய ஆறுகளின் மருங்கில் இருக்க எத்துணை அவாவுகின்றோம். சென்னையிலிருக்கும் எங்கட்கு அத்தகைய பேறு கிடைத்திலதேனும், எங்கட்கு அணித்தே கடற்கரை யிருப்பது பெரும் ஆறுதலாக இருக்கின்றது. ஆறு, ஏரி முதலிய நீர் நிலைகளில்லா நகரம், நாளடைவில் மக்கள் வசிக்கவொண்ணாக் கடுஞ்சுரமாக வன்றோ முடியும். முற்காலங்களிலும், தற்போதும், பெரிய பெரிய புண்ணிய தலங்களும், வியாபாரப் பட்டணங்களும் ஆறுகளின் கரை மருங்கிலேயே ஏற்படுத்தப்பட்டன. "மூர்த்தி, தலம், தீர்த்தம்" என வழங்குந் தொடர் மொழிகளை நோக்குக. தமிழ்மொழியும், தமிழ்மக்களும் மிக்க உச்ச நிலை யடைந்திருந்த சங்க காலத்தில் காவிரியாற்றின் பெயரினையே தானும் பெற்றிருந்த காவிரிப்பூம் பட்டினத்தின் சிறப்பை ஈண்டுச் சொல்லவும் வேண்டுமோ? மக்கள், தமக்கு இவ்வாறெல்லாம் பெரும்பயன் விளைத்துத் தாம் இருக்கும் இடங்களையும் எழில் பெறச் செய்யும் இந்த ஆறுகளுக்கு நன்றி பாராட்டுவான் வேண்டி, அவைகளின் பெயரை, கிருஷ்ணா ஜில்லா கோதாவரி ஜில்லா, திருவல்லிக்கேணி, திருவையாறு, பஞ்சாப் என்பவைகளிற் போன்று தாம் வசிக்கு மிடங்களுக்குப் பெயராக வைத்துக் கொண்டது மன்றி, தமக்கும், தம்முள்ளும் சிறப்பாகப் பெண்களுக்கும் அந்த ஆறுகளின்பெயரைச் சூட்டிக்கொண்டனர். காவேரி, கோதாவரி, கங்கை, ஐராவதி, பவானி, துங்கபத்திரை, யமுனாவதி என்பனவும் இன்னோரன்ன பிறவும், நம்முட் பெண் மக்களுக்குப் பெயர்களாக வழங்குதல் இற்றை ஞான்றும் யாங்காண்டு மன்றே.

அதுவன்றியும், ஓவியத்தின் நுட்பங்களறிந்து, அவ்வாறாகச் சித்திரங்களெழுதும் ஒரு விற்பன்னரது சித்திரப் படமொன்றில் கடல், யாறு, குளம், ஏரி, அருவி முதலிய நீர்நிலைகள் அழகுறத் தீட்டப்பட் டிருப்பின், அச்சித்திரம் நமக்கு தெவிட்டாத இன்பம் பயக்கும் அமுத ஊற்றாக ஒளிர்கின்றது. மலைச் சரிவுகளில், அருவிகள் சிலுசிலுவென்று ஓடி வருதல், மலை விளிம்புகளினின்று வீழும் நீர் வீழ்ச்சி, கடற்கரைகளில் பரதவர் களியாட்டம், கடல் நடுவில் ஒரு மரக்கலம், ஒரு யாற்றின் கரை மருங்கில் அழகிய மணலில் இளஞ்சிறார்கள் விளையாடுதல், இருண்ட ஒரு சோலையின் நாப்பண் உள்ள ஓரழகிய வாவியின் சலவைக் கற்படித் துறைகளில், பிறர் கட்புலனுக் கெட்டாதபடி, புதிது பொருந்தப் பெற்ற இளங் காதலரிருவர் ஒருவருடைய காதல் மற்றொருவரை அணித்தே ஈர்க்க, தம்முள் மகிழ்ச்சிபொங்க, வார்த்தையாடிக் கொண்டிருத்தல் என்பன போன்ற சித்திரங்கள், காண்டொறும், காண்டொறும் புதிது புதிதாக இன்பந் தருமென்பது, இதனையுண்மையில் அனுபவித் தறிந்தோர்க்குத் தேற்றம். மேற்போந்த இந்நுட்பத்தினை யறிந்தே இந்திய அன்னை தவங் கிடந்து பெற்றெடுத்த சித்திர விற்பன்னராகிய இராஜா இரவிவர்மர், இயற்கை யமைப்புக்கு அணுவேனும் மாறுபடாது உள்ளதை யுள்ளவாறே எழுதிக் காட்டும் தமது அழகிய சித்திரப்படங்களில் பெரும்பான்மையாக, ஒரு நீர் நிலையினைப் பொருத்தமுற அமைத்துக் காட்டுவர். அவற்றுள்ளும் பெண்மணிகள் ஒளிரும் சித்திரப்படங்களில், இரவி வர்மர் இன்றியமையாததாக ஒவ்வொரு நீர்ப்பாங்கினை அமைத்திருத்தலைக் காண்போமானால், பெண்மைக்கும், அமைதியுள்ள தண்ணீர்மைக்கும் பொருத்தம் மிக விருக்கின்றதென்னும் அப்பெரியாரது உள்ளக் கிடக்கை யாவர்க்கும் விளங்காமற் போகாது.



அல்லிமலர்கள், நீண்ட நாணற்புற்கள் முதலியன செழித்து வளர்ந்து தெள்ளிய நீரொழுக்கினையுடைய ஓர் அருவிக் கரை மருங்கில் உள்ள பாறையொன்றின் மேல் வெள்ளைக் கலையுடுத்துக் கலைமகளார் அழகுபெற அமர்ந்து இன்னிசை யாழ் ஒன்றினை மிழற்றுவதும், அவ்வின்னிசையை, பைந்தோகையினையுடைய மயிலொன்று அம்மையாரின் மருங்கு நின்று செவிசாய்த்து மடுத்துச் செம்மாந்திருப்பதுவும்; வட்டமாகச் சூழ்ந்திருக்கும் மலைகளுக்கிடையே, எண்ணிறந்த செந்தாமரை மலர்கள் பூத்திருப்பதுவும், வெள்ளிய சிறகினையுடைய அன்னப் பறவைகள் மெதுவாக நீந்திக் கொண்டிருப்பதுவும் ஆகிய அகன்ற நீர்ப் பரப்பினையுடைய மடுவில், மிகப்பெரிதாக வளர்ந்திருக்கும் செந்தாமரை மலரினின்றும் இயல்பாக முளைத்தெழுந்ததென்ன திருமகளார் பொற்கொடி போல் நெடிது நிற்பதும், ஆகிய இவைகள் யாவர் மனதைத் தான் ஈர்க்கா?

"இறைகளோ டிசைந்த இன்பம்
இன்பத்தோ டிசைந்த வாழ்வு"

என்று நம்பியாரூரர் திருவாய் மலர்ந்தருளிய வண்ணம், இயற்கையோடு இசைவு பெற எளிய வாழ்வு நடத்தத் தெரிவதே உண்மை அறிவாமென்றும், அவ்வாழ்க்கையினா லெய்தும் இடையறாத இன்பமே என்றும் பொன்றாச் செல்வமென்றும், இரவிவர்மரது உள்ளத்தினின்றும் உயிர்பெற்றெழுந்த கலைமகளாரும், திருமகளாரும் முறையே நமக்கு அறிவு புகட்டவில்லையா?

இதுவன்றியும், தனது அரண்மனைப் பொழிலில் அல்லிமலர்கள் முளைத்திருக்கும் வாவியின் ஓரத்தில் ஒரு பூஞ்செடி மாடத்தின் மேலிருக்கும் அழகிய அன்னப்பறவை நளஅரசனுடைய புகழையும், மங்கையர்கள் தம்மனத்தை வாங்கும் அவனது தடந்தோளினது பெருமையினையும் எடுத்துச் சொல்லச் சொல்ல, காதல் வெப்பத்தினால் உயிர் சோர்ந்து, "ஆ! அவ்வாண்டகையை

அடையப் பெறுவேமா!" என்று மனந்தளர்ந்து, அவ்வன்னப் பறவையினையே உற்று நோக்கிய வண்ணமாயிருக்கும் தமயந்தியின் பேரெழிலையும், கானகத்தில் ஒரு குளக்கரையில், துஷியந்த அரசன் மேற்கொண்ட காதல் வெப்பம் பொருளாய், பஞ்சவருணப் படாம் விரித்தது போலுள்ள, பலநிறமுள்ள மலர்ப்பாயலிற் படுத்துத் தன் காதலை அறிவித்துத் தாமரையிலையில் ஒரு செய்யுள் எழுதிக்கொண்டிருக்கும் சகுந்தலையின் பெருவனப்பினையும் கண்ணுள்ளோர் காண்பாராக. *ஆ! பார்மின், இரவிவர்மர் எழுதும் ஓவியங்கள் எத்துணை நுட்பமாய் உருவ உண்மையியல் வழாமல் விளங்குகின்றன? அதுநிற்க.

ஆகவே ஒழுகிய நீர் நிலையினைப் பார்த்த ஞான்று யார்தான் பரவசப் படாமலிருக்க முடியும்? பலவித சொற்களை ஒன்று சேர்த்து நயம்படக்குழைத்துப் பாட்டாக நமது உள்ளக் கிழிகளில் ஓவியந் தீட்டுவதில் வல்லுனரான மணிவாசகனாரும், தாம் ஒருகால் குவளை, கமலம் முதலிய மலர்கள் அலர்ந்திருப்பதும், அவற்றினிடையே பல நிறப் புட்கள்வந்து ஆர்ப்பரிப்பதுமான ஓர் ஆழ்ந்தமடுவைக் கண்டபோது, அம்மடு அவருக்குக் கடவுள், அம்மையப்பராக விளங்குவதை,

"பைங்குவளைக் கார்மலராற்
செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால்
பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு
வார்வந்து சார்தலினால்
எங்கள்பிராட்டியும் எங்கோனும்
போன்றிசைந்த பொங்குமடு"

என்னும் பாட்டோவியத்தால் எழுதி நமது அகக்கண் முன்னே காட்டுகின்றார். சின்னாட்களுக்கு முன் நம்மிடையிருந்த இராமலிங்க அடிகளும், இறைவன் தமக்குத் தெள்ளிய தண்ணீர் போன்று சுவை பயத்தலை,

"ஓடையிலே ஊறுகின்ற
தீஞ்சுவைத் தண்ணீரே"

என்று அருளினார்.

திருநாவுக்கரசு நாயனாரும், மற்றோரிடத்தில், ஈசன் எந்தை இணையடி நீழல்,

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும்"

போன்றிருந்த தென்பதை உண்மையாய் அறிந்து கூறுதல் காண்க.

இங்கிலாந்து நாட்டிலும் பத்தொன்பதாவது நூற்றாண்டின் நடுவில், வேர்ட்ஸ்வொர்த் (Wordsworth) காலரிட்ஜ் (Coleridge), ஸதே (Southey) என்னும் பாவலர்கள் எந்நேரமும், ஏரி, குளம், ஆறு, ஓடை முதலிய நீர்ப்பாங்குகளில் உலவித் திரிந்து, அவ்வியற்கையின்பத்தினை நுகர்ந்து, தாம் கண்ட அரிய உண்மைகளைத் தம் பாக்களில் பொதிந்து வைத்தார்கள். இதனால், அக்காலத் திருந்தோர், இவர்கட்கு "ஏரிப்புலவர்கள்" (The poets of the Lake School) என்று வழங்கினார்கள்.

ஆகவே, இத்துணையுங் கூறியவாற்றால், திருநாவுக்கரசு நாயனார், "ஏரி நிறைந்தனைய செல்வன்" என்னும் அருமைத் தொடர் மொழிகளில் எத்துணை இயற்கை வனப்பின் வருணனையையும், விழுமிய பொருளாழத்தையும் பொதிந்து வைத்திருக்கின்றார் என்பதைச் சிறிதே உணர்ந்தேம். இனி, நீர் நிலைகளைக் கடவுளின் கருணைக்கு மேற்காட்டியவாறு உவமித்துச் சொல்லலாமெனினும், அன்பே உருவாயுள்ள இறைவன் உயிர்கள் மாட்டுக் கொண்டுள்ள அருட்டிறத்தினை நீர் நிலைகளுக்கு ஒப்பிடும்போது, அவற்றுள்ளும் மிகப் பெரிதாகிய கடலினையன்றோ உவமித்துக் கூறுதல்வேண்டும்; அவ்வாறின்றிச் சிறிய நீர்த் தொகுதியினையே கொண்டிருக்கின்ற ஏரியினையா, அவன் பேரருட் பெருக்கத்திற்கு உவமித்துக்கூறுவது? என்னும் ஒரு வினா எழலாம். இவ்வினாவிற்கு, ஒல்லும் வகை முயன்று விடையிறுக்கின்றாம்.

கடல், ஒரு நாட்டிற்கு அணிபெற அமைந்திருந்த போதிலும், எல்லா உயிர்களாலும் இன்றியமையாது வேண்டப்படும் மழை பெய்தற்குக் காரணமாயிருப்பினும், அதுதான், மக்கள் செயல்முறைக்கு நாடோறும் உபயோகப்படுவதன்று. நாடெங்கும் மழையின்றி குளங்குட்டைகள் வறண்டு, கொடிய வற்கடம் மக்களை வருத்துகின்றபோது, அண்மையில் இருக்கும் கடலின் உவர்ப்பு நீர் என்செய உதவும்? அதனை மக்கள் பருகலாமா? பயிர்கட்குப் பாய்ச்சுதற்கு இசைந்ததா? இதனை எழுதுங்கால், சில திங்கள்கட்கு முன்பு தென்னாடுகளில் தண்ணீர்ப் பஞ்சம் நேர்ந்தபோது, கடற் கரையிலுள்ள சென்னப் பட்டினம் பட்ட பாடு எம் நினைவிற்கு வருகின்றது. அக்காலத்துக் கடல், நிறைந்திருந்துமென்? குறைந்துபோயிலென்? சென்னை வாசிகளும், சென்னை நகரபரிபாலன சங்கத்தாரும், "அந்தோ! வானம் வழங்கிற்றில்லையே; புழல் ஏரியில் தண்ணீர் மட்டம் குறைந்து விட்டதே; அஃதென்ஞான்று நிறைவு பெறும்; எங்கள் நீர்வறட்சி எப்போது தீரும்" என்று ஏங்கி நின்றனர். நற்காலமாக வானம் வழங்கிற்று; ஏரி நிறைந்தது; அதனால் செல்வம் பெருகிற்று; எமக்கு அப்பாது அருள் வாக்காகிய "ஏரி நிறைந்தனைய செல்வன்" என்னும் தொடர் மொழிகளின் பொருள் சிறிதே விளங்கிற்று. இது பற்றியே,

". . . . கடல்பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும்"

என்று அவ்வையார் கூறினார் போலும்.

ஏரி நிறைந்தால், அதன் நீர் நெடிது நின்று யாவர்க்கும் பயன்படும். முதற்கண், தாக விடாயை அதன் நீர் தணிக்கும். நீரின்றி, ஒரு மகன் சின்னாட்களேனும் வாழுங்கொல்? பிறகு, உழவு முதலிய வேறு பல காரியங்கட்கும் ஏரி நீர் இன்றியமையாது வேண்டப்படுகின்றது. அப்பர் வேளாளராதலால் அவர் ஏரியினுடைய பயனை மிகவும் உணர்ந்திருந்தார் போலும். ஆனால், இது வெறும் அநுமானமே யொழிய, வேறன்று. மற்றவர்கட்கு ஏரியின் பயன் தெரியா தென்று திண்ணமாய்க் கூறுகின்றோம் — எம்முடைய கூற்றன்று. எனினும்,

"உழுத சால்வழியே உழுவான் பொருட்டு
இழுதை நெஞ்சமி தென்படு கின்றதே"

என்னும் குறுந்தொகை யடிகளான் உழவுத் தொழிலில் அப்பருக் கிருந்த இடையறாப் பயிற்சியையும், மற்றும், பயிர்த் தொழிலின் மேன்மை, உழவு செய்யும் விதம், காவிரிப் பெருக்கு வேளாண்மைக்குப் பயன்படுதல், உழ

* Compare also the famous painting of the Florentine painter of repute, Leanardo da Vinci viz. "La Gioconda" with the running rivulet in the distant back ground.

வோடு இன்றியமையாத தொடர்புடைய கால் நடைகளை விற்று வாங்குந் துறைகளில், அக்காலத் திருந்தோர் சாமானிய மக்களை வஞ்சித்துப் பொருள் கவர்தல் என்னும் இவைகளை அடுத்தடுத்து நம் நாயனார் தம்பாக்களில் பெய்துரைத் தலையுங் காணின், அப்பர் வேளாளரென்றும், பழுத்த அறிவினரென்றும், முதிர்ந்த வயதுடையாரென்றும், நுண்ணிய நோக்குடையாரென்றும் எவர் தாம் சொல்லாம லிருக்க முடியும்?

மற்றும், ஏரி நிறைந்தது, ஏரி குறைந்தது என்று சொல்லக் கேட்டிருக்கிறோமே தவிரக் கடல் நிறைந்தது கடல் குறைந்தது என்று வழங்க யாம் இதுகாறுங் கேட்டோமில்லை ; கடல், எக்காலத்தும் ஓரே பெற்றித்தாய் இலங்குவதே யொழிய அதற்கு நிறைவு, குறைவுகளேது ?

பன்னிப் பன்னிச் சொல்வதிற் பயனென் ?

ஓரூரில் உள்ள ஏரி நிறைந்தால், அதன்கணுள்ள எல்லாச் செல்வமும் பெருகும் ; அது குறைந்தால் எல்லாச் செல்வமும் அருகும். இக்கருத்தினை யுணர்ந்தே திருவள்ளுவரும், தமது விழுமிய திருக்குறளில், ஒப்புரவறிதல் என்னும் அதிகாரத்தில்,

“ ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு ”

என்று, ஓர் உள்ளூர்க் குளத்தில் நிறைந்த நீர் நெடிது நின்று யாவர்க்கும் பயன்படுதலை நன்கு விளக்கினர்.

எம் அன்னைமார் எம்மாட்டுக் கொண்டுள்ள அன்பு, ஏரி நிறைந்தனைய செல்வம்போல் பொங்கி வழிகின்றது. இவ்வாண்டு, நமது சைவ சித்தாந்த மகா சமாசத்திற்குத் தலைவராய் வீற்றிருந்த திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரது சீரிய பெருஞ் சொன்மாரியும், அருட்பெருக்கும், ஓயாது பொழிந்து ஏரி நிறைந்தனைய செல்வம், மடை திறந்த வெள்ளம்போல் எங்கும் பாய்தலால், எமது உள்ளங்களில் இதுகாறும் வறண்டு, காய்ந்திருந்த சைவப்பயிர் மீண்டும் தளிர்த்து வானுற வோங்கி வளர்வதாயிற்று. அப் பெரியாரது அருள்வழி நின்று இயங்கும் சைவ சித்தாந்த மகாசமாசமும், புத்துயிர்பெற்றெழுந்த சித்தாந்தப் பத்திரிகையும், ஏரி நிறைந்தனைய செல்வம்போல பல்லூழிகள் நெடிது நின்று யாவர்க்கும் பயன் படுவதாக.

ஆழிபுடை சூழுலகம் யாவும் நலமேவ
அறத்துறை புகுந்துயிர்கள் அன்புவெள்ளம் [மூழ்க
பாழில்அலை வேனுடைய பந்தனைகள் சிந்த
பரிந்தெமைச் சுரந்தருள் நிரந்தரமும் வாழ்க.

---

# சமய உணர்ச்சி வரலாறு

[ம. பாலசுப்பிரமணிய முதலியார், B. A. B. L.]

தொன்று தொட்டு நாகரிகமுடைய நாடுகள் என்று எண்ணப்பட்ட நாடுகளில் உள்ள மக்கட் கூட்டங்களில் சமய உணர்ச்சி பற்பல வகையாக இருந்து வருகிறது. சமய உணர்ச்சி இல்லாத நாடு நாகரிகமுடைய நாடாக அறிஞர்களால் கருதப்படுவ தில்லை. ஆகவே சமய உணர்ச்சி நாகரிகத்துக் கோர் அறிகுறிபோல் விளங்குகிறது. இத்தகைய பெருமை வாய்ந்த சமய உணர்ச்சி, நாகரிக வளர்ச்சியில் எப்போது தோன்றி, எவ்வாறு வளர்ந்து வந்திருக்கிறது என்பது, ஆராய்தற்குரிய பொருள்களுள் ஒன்று. அவ்வாராய்ச்சியில், பற்பல மேல்நாட்டுப் பேரறிஞர்கள் ஈடுபட்டுத் தங்கள் முடிபுகளைச் செவ்வனே நூல் வாயிலாக வெளியிட்டுள்ளார்கள். சிறப்பாக ஆசிரியர் ஏ. என். ஒயிட்ஹெட் என்பவர் “ ஆக்கும் போதில் சமயம் ” (Religion in the making) என்ற பொருள்பற்றி 1926-ம் ஆண்டில் ‘லவல்’ விரிவுரைகள் (Lowell Lectures) நிகழ்த்தினர். ஆசிரியர் மக்டுகல் என்பார் தம் “ மக்கட்கூட்ட மனநூல் ” (Social Psychology) என்னும் நூலில் இரண்டாம் பகுதியில் பதின்மூன்றும் அதிகாரணத்தில் இப்பொருள் பற்றியே பல அரிய கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இவ்விருவர் கருத்துக்களையும் தொகுத்துச் சமய உணர்ச்சி வரலாற்றைப்பற்றி மேலைத் திசைப் பேரறிஞர் என்ன கூறுகின்றனர் என்பதை மிகச் சுருக்கமாக அறிவிப்பதே இச்சிறு கட்டுரையின் நோக்கம்.

எந்நாட்டிலும் எக்காலத்தும் இரண்டும் மூன்றும் ஐந்து என்பதைக் கணக்கறிஞர் ஒப்புக்கொள்வர். ஆனால் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு காலத்திலும் சமயத்தைப் பற்றிய கருத்துக்கள் மாறிக்கொண்டே வருகின்றன. இஃதே சமயத்தின் பெருமையும் சிறப்பும். அவ்வாறு ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஒவ்வொரு நாட்டின் வாழ்க்கையிலும் ஒவ்வொரு காலத்தும் மாறி வருங் கருத்துக்கள் அனைத்தும் மூன்று பிரிவுகட்குள் அடங்கும். அப்பிரிவுகளைப் பொதுவாக, அறியாத கடவுள் நிலை, ஆகாத கடவுள் நிலை, தோழக்கடவுள் நிலை (God the void, God the enemy, God the Companion) எனக் கூறலாம். சமய உணர்ச்சி தோன்றி வளர்ந்த முறையைப் பாகுபடுத்தின், சடங்கு, உள்ளக் கிளர்ச்சி, நம்பிக்கை, தருக்க அறிவு (Ritual, emotion, belief and rationalisation) என நான்கு படிகளாக அமையும். முன்னே கூறிய பாகுபாடு, புறத்தினின்றும் தோன்றும் சமய உணர்ச்சியின் தோற்ற வளர்ச்சி முறை. பின்னர்க் கூறியது, அகத்தே தோன்றும் சமய உணர்ச்சியின் தோற்ற வளர்ச்சி முறை. புறமும் அகமும் ஒத்தே நிலவும் இயல்புடையன.

விலங்குகளின் பழக்கங்களை ஆராய்ந்தறிந்த அறிஞர் அவைகள் தங்கள் உயிர் வாழ்க்கைக்கும் தற்பாதுகாப்புக்கும் பொருள் தேட வேண்டிய காலம் போக எஞ்சிய காலத்தில் தங்கட்கு மிகுதியாயிருக்கும் வலிமையைக் கொண்டு

கூட்டமாகச் சேர்ந்து இன்புறும் பழக்கமுடையன என்று கூறுகின்றனர். அப்பழக்கங்கள் மக்கட் கூட்டங்களில் நிலவும் சடங்குகளைப்போ லிருக்கின்றன என்றும் அன்னார் உரைக்கின்றனர். ஆகவே, வேலையில்லாத போழ்தில் செலவில்லாத வலிமையைப் பொருட்படுத்திக் கூட்டமாகச் செய்யும் சடங்குகள், விலங்குகட்கும்; விலங்கையொத்த தாழ்ந்த அறிவும், கீழ்ப்பட்ட நாகரிகமும் உடைய மக்கட் கூட்டங்கட்கும் இன்பத்தை விளைக்கும் செயல்களாய் அக்கூட்டங்களில் பழக்கமாக நடைபெறுவனவாக நாம் தெளிவாய் உணரலாம்.

முதல் முதலாக, மேன் மேலும் ஒன்றைச் செய்ய இயக்கும் இயற்கையுணர்ச்சியே (Instinct of Repetition) இத்தகைய சடங்குகளுக்கு அடிப்படையாக நிற்கிறது. பிறகு இச்சடங்குகளில் ஒரு வகை இன்பம் பிறக்கிறது என்ற உணர்ச்சி தோன்ற, உள்ளக்கிளர்ச்சி உண்டாகிறது. பிறகு இவ்வுள்ளக் கிளர்ச்சியின் இன்பத்தை யெய்துதற்கென்றே இவ்வகைச் சடங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

பிறகு சடங்குகளால் ஒரு வகைச் சேர்க்கை யின்பம் அடையும் மக்கட் கூட்டமானது அவ்வின்பத்தின் பல வகைகளையும் அளவைகளையும் அறிந்து அவைகட் கிசைந்தவாறு சடங்குகளைக் கூட்டியும் மாற்றியும் வருகிறது. இதனால் படிப்படியாகச் சடங்கு நேர்மை வல்ல அறிவுடைய தாகிறது. (Mankind becomes an artist in ritual) இப்பழக்கம் முதிர முதிரச் "சடங்குகள் கேவலம் உள்ள மகிழ்ச்சியைப் பயத்தற்காக மட்டுமா யிருக்கும்? வேறே பெரிய காரணம் ஏதாவது இருக்க வேண்டும்" என்ற எண்ணம் மக்கட் கூட்டத்தில் தோன்றுகிறது.

அகவுணர்ச்சி இவ்வாறு நிற்க, புறத்தே, தாழ்ந்த அறிவுடைய மக்கள், இயற்கை நிகழ்ச்சிகளைக் காணுந்தோறும் அச்சமுற்றுத் திகைத்து நிற்கின்றனர். இடி, மின்னல், மழை, புயல் முதலியனவும், தீயின் வெப்பம், நீரின் தட்பம் முதலியனவும், இவை போன்ற எண்ணிறந்தனவும் அம்மக்களுக்குப் புலனுகுந்தோறும் அவற்றின் காரணத்தை அவாவி அவர்கள் மனம் நிற்கிறது. ஆயினும் அறிவே இல்லையென்று சொல்லக்கூடிய அவ்வளவு தாழ்ந்த நிலையில் அவர்கள் இருப்பதால், இத்தகைய நிகழ்ச்சிகளும் செயல்களும் "புதுமையல்ல, இவைகள் இயற்கை விதிகளின்படி நடக்கின்றன" என்று தோன்றாது அவர்களுக்குப் பயத்தை உண்டாக்குகின்றன. தனக்கு மேம்பட்ட ஒன்றினிடத்தில் தான், பயம் இருப்பது யாருக்கும் பழக்கம். ஆகவே தங்கள் சக்திக்கு மேம்பட்ட சக்தியுடைய ஏதோவொன்று இவை போன்ற புதுமைகளுக்குக் காரணமா யிருக்கவேண்டுமென்று அம்மக்கள் எண்ணுகிறார்கள். காரண காரிய நிகழ்ச்சி முறை (Mechanical causation) யறியும் பழக்கமில்லாத அவர்கள் மேற்பட்ட சக்தியுடைய அக்காரணம் தங்களைப் போல் உறுப்புக்களை அதிகமாகவுடைய ஒருவனாக விருக்கவேண்டுமென்று எண்ணுகிறார்கள். பல நிகழ்ச்சிகளுக்குக் காரணங்களாக அதிக சக்தியுடைய, தங்களைப்போல் உறுப்புக்களைப் பலவிதமாக உடைய பலர் உளர் என்றும் கருதுகிறார்கள். அவர்களைத் தான் கடவுள் என்றும் பல கடவுளர் என்றும் வழிபடத் தொடங்குகின்றனர்.



அக்கடவுளர்க்கு மேம்பட்ட சக்தியிருத்தலால் அவர்கள் கோபித்தால் தம்மைத் தண்டிப்பார்கள், சந்தோஷித்தால் தம்மைப் பாதுகாப்பார்கள் என்ற உணர்ச்சி அம்மக்களுக்கு உடனே தோன்றுகிறது. ஆகவே அவர்கள் கோபத்துக்குக் காரணமாகும் என்று எண்ணக் கூடியவைகளைச் செய்யக் கூடாது, சந்தோஷத்துக்குக் காரணமானவைகளைச் செய்யவேண்டும் என்று விலக்குகளையும் விதிகளையும் ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள். அம்மக்கட் கூட்டத்தில், ஒவ்வொருவனுக்கும் தனித்தனியே வீடு, வாசல், நிலம், நீர், பொருள் சொந்தம் என்ற நாகரிக நிலை வராத காலமாகையால் யாராவது ஒருவன் விதி விலக்குகட்கு மாறாக நடந்தால் அக்கூட்டத்திற்கே தீங்கு நேரிடும் என்று அச்சமுற்றுத் தங்கள் பழக்க ஒழுக்கங்களை மிகக் கடுமையாகப் பாதுகாக்கின்றனர். தன் வினையினால் இன்ப துன்பங்கள் வருகின்றன என்ற உணர்ச்சியில்லாமல் எல்லாம் வேறே மேம்பட்ட காரணத்தால் நிகழ்கின்றன என்ற உணர்ச்சி மட்டும் அவர்களிடையில் நிலவுகிறது.

முன்னரே சடங்குகட்குக் காரணம் வேறே புறம்பாக ஒன்று இருத்தல் வேண்டுமென்ற உணர்ச்சி மக்கட்கூட்டத்தில் தோன்றுகிறது என்று கூறினேன். அதனால் இயற்கை நிகழ்ச்சிகட்குக் காரணமாக அமைத்த கடவுளர்க்கு இன்பத்தை விளைத்துக் கோபத்தைப் போக்கும் சடங்குகளாகவே அகத்தையும் புறத்தையும் சேர்த்துச் சடங்குகளைப் பாராட்ட மக்கட் கூட்டத்தினர் தொடங்கினர். சடங்குகளையும் கடவுளரையும் சேர்த்து எண்ணிறந்த கட்டுக்கதைகள் அழகாகவும் தாழ்ந்த அறிவைக் கவரும் வலிமை யுடையனவாகவும் எழுதினர். அக்கதைகளை நம்பிச் சடங்குகளை நடத்தி உள்ள மகிழ்ச்சியடையும் நிலையில், நாகரிகம் முற்றுப் பெறாத பற்பல மக்கட்கூட்டங்கள் இற்றைக்கும் நிற்கின்றன. திருப்திகரமான சடங்குகளும், விசாரியாமலே திருப்தியடையும் நம்பிக்கையும் உடைய நிலையே (The stage of satisfactory ritual and satisfied belief) அக்கூட்டங்களின் நிலையாகும்.

மக்கட்கூட்டங்கள் தமக்குள் போர் புரியத் தொடங்கியபோது பல அரிய உண்மைகள் வெளியாயின. வெற்றி பெற்ற கூட்டத்தினர் தோல்வியுற்ற கூட்டத்தைச் சேர்ந்த நிலம், நீர், மாடு, கன்று முதலியவைகளையும், அக்கூட்டத்தினரையும் உடைமைகளாகவும் அடிமைகளாகவும் பெற்றனர். தாங்கள் அதுகாறும் கோபமும் கொடுமையும் உடையவராக எண்ணிய கடவுளைத் தமக்குச் செல்வம் தந்தமையால் நன்மையும் இரக்கமும் உடையவராக எண்ணி நன்றி பாராட்டத் தொடங்கினர். சமயச் சடங்குகளைத் தவறாமல் செய்தும் தோல்வியுற்ற கூட்டத்தினர், அதுவரை எல்லாவற்றிற்கும் கடவுளே காரணம் என்ற எண்ணத்தைச் சற்று நெகிழவிட்டுத் தங்கள் தோல்விக்குத் தங்கள் வலிமைக்குறைவு, அறிவுக் குறைவு, ஆயத்தக் குறைவு முதலியவைகளே காரணம் என்று எண்ணிச் செயல்களுக்குக் காரணங்களைத் தங்கள்மீதும், தங்களுள் ஒவ்வொருவர் மீதும் சுமத்தத் தொடங்கினர். கடவுள் நன்மையும் இரக்கமும் உடையவர் என்ற உணர்ச்சியும் தம்மின்ப துன்பங்கட்குத் தாமே காரணம் என்ற உணர்ச்சியும் ஒருங்கு சேர்ந்து முதிர முதிர மக்கட்கூட்டத்தில் ஆட்சிபெற்றிருந்த கடுமையான சட்ட திட்டங்கள்

கொஞ்சம் கொஞ்சமாக வலிகுன்றின. ஏனெனில் அவைகட்கு மீறி நடந்தால் கூட்டத்துக்கே தீங்கு வரும், கடுமையான கடவுள் தண்டிப்பார் என்ற உணர்ச்சி அற்றுப் போயிற்று.

பிறகு மக்கட்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள், தனித்தனியே பற்பலவாறு நினைக்கவும், செய்யவும் தலைப்பட்டார்கள். நல்லவர்கள் துன்புறுதல், தீயவர்கள் இன்புறுதல் முதலியவைகளைக் கண்கூடாகக் கண்டவர்கள் முற்பிறப்பு, பிற்பிறப்பு முதலிய காரணங்களை உரைக்கத் தொடங்கினர். இயற்கை நிகழ்ச்சிகளையும் அவைகளின் விதிகளையும் பலவாறு ஆராய்ந்த அறிஞர், மக்கள் பகுத்தறிவைப் பல்லாயிரமடங்கு அதிகரிக்கச் செய்தனர். இச்செயல்களெல்லாம் மக்கட் கூட்டப் பழைய பழக்க ஒழுக்கங்கட்கும் ஒருமைப்பாட்டிற்கும் மாறாகவும் பெரிதும் முரணாகவும் இருந்தன. ஆகவே அப்பழக்க ஒழுக்க ஒருமைப்பாடுகளைப் பேணிய பெரியோர்கள் ஆராய்ச்சி வல்லுநரைத் தாக்கித் துன்புறுத்தினர். சமயத்தின் பெயரால் நடந்த கொலை, சிறை முதலியவைகட்கு எந்நாட்டிலும் எக்காலத்திலும் எத்துணை உதாரணங்கள் வேண்டுமெனினும் கிடைக்கும். மக்கள் பெருங் கொடுமை கடைசியாகத் தஞ்சம் புகுந்தது சமயத்தில் என்று ஆசிரியர் ஒயிட்ஹெட் கூறுகிறார். (Religion is the last refuge of human savagery). இவ்வகைப் போர் ஒவ்வொரு சமயத்திலும் பழமையைப் பேணும் கக்ஷியினருக்கும் (Conservatives) வேரைத் துருவி உண்மை ஆராயும் கக்ஷியினருக்கும் (Radicals) இன்றைக்கும் நடந்தே வருகிறது. இப்போரின் பயனைப் பழைய வழக்கங்களும் அவைகட்குக் கூறப்படும் காரணங்களும் நாடோறும் மாறிக்கொண்டே வருகின்றன.

நாகரிக முதிர்ச்சியினால் கூட்ட உணர்ச்சியிலிருந்து (Social consciousness) சுய உணர்ச்சியும் (Individual consciousness) பிறகு பல நாடுகளைச் சுற்றிப் பலவகை நன்மைகளையும் இன்பங்களையும் அறிதலால் உலக ஒருமை உணர்ச்சியும் (World consciousness) தோன்றுகின்றன. அச்சத்தையும் துன்பத்தையும் விளைக்கும் கடவுள் உண்டு என்ற நிலைக்கு வரும்வரையில் அறியாத கடவுள் (God is void) என்றபடியிலும் கடவுள் நன்மையும் இரக்கமும் உடையவர் என்ற உணர்ச்சி தோன்றும் வரையில் ஆகாத கடவுள் (God is enemy) என்ற நிலையிலும் அதன்பிறகு தோழக் கடவுள் என்றபடியிலும் மக்கள் நிற்கிறார்கள் என்று இக்கட்டுரைத் தொடக்கத்திற் கூறிய பாகுபாடு புலனாகும். சடங்கு, உள்ளக் கிளர்ச்சி, நம்பிக்கை, தருக்க அறிவு என்ற நான்கு படிகளும் முறையே தோன்றிய போதிலும், ஒவ்வொன்றும் எக்காலத்தும் நிலைத்து ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு மக்கட் கூட்டத்திலும் அக்கூட்டத்தைச் சேர்ந்த ஒவ்வொருவருள்ளும் குடிகொண்டு, சேர்ந்தும், பிரிந்தும், ஒன்றை மற்றொன்று தாக்கியும் பலவகையாக இயங்கி, மொத்தத்தில் ஒவ்வொரு சமயத்திலும், நாட்டிலும், மக்கட் கூட்டத்திலும், மக்களுள்ளும் நிலவும் சமயக் கொள்கைகளை அப்போதைக் கப்போது மாற்றிக் கொண்டேயிருக்கும்.

அறச் செம்மை பொருந்திய வாழ்க்கையும் இயற்கையைத் தெரிந்த அறிவும் ஒருங்கு சேர்ந்து மனித வாழ்க்கையைப் பயப்பதை நோக்கமாகக் 



கொண்டு அதற்கிசையச் சடங்கு, உள்ளக் கிளர்ச்சி, நம்பிக்கை, தருக்க வறிவாகிய நான்கையும் ஒழுங்குபடுத்திய சமயமே அறிவு பொருந்திய சமயம் (Rational religion) என்று ஆசிரியர் ஒயிட்ஹெட் முடிபு கூறுகிறார். நம் சைவசித்தாந்த சமயத்திலும் இக்கட்டுரையிற் கூறிய வரலாற்றுப் பகுதிகள் யாங்கு உள்ளனவென்றும், இற்றைக்கு நாம் கையாளும் சைவசித்தாந்த சமயம் எவ்வாறு அறிவு பொருந்திய சமயம் எனத் தடையின்றி எண்ணப்படுமென்றும் பேரறிஞர் நன்கறிவர்.

---

## “கறைக்கண்டனுக்கு மூத்தவள்”

[திருக்குறள் விளக்க ஆசிரியர், கி. குப்புசாமி முதலியார்]

இப்பொழுது நாம் எழுத எடுத்துக் கொண்ட விஷயம், “கறைக்கண்டனுக்கு மூத்தவள்” என்பதாம். அதாவது பாற்கடலில் தோன்றிய விடத்தைத் தேவர்கள் உய்யும் பொருட்டுத் திருவமுது செய்து, அவ்வடையாளந் தோன்ற அவ்விடக் கறையினைக் கண்டத்துள் நிறுத்திய உருத்திரனையும் படைத்த பராசத்தி என்பதாம். இச்சொற்றொடர் அபிராமி யந்தாதியினுள் பதின் மூன்றாவது செய்யுளாகவுள்ள,

“பூத்தவளே புவனம் பதினான்
கினையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே
கறைக் கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா
முகுந்தற் கிளையவளே
மாத்தவளே உன்னையன்றி மற்றோர்
தெய்வம் வந்திப்பதே”

என்னுஞ் செய்யுளிலுள்ள சொற்றொடராக இருப்பதால் அச்செய்யுள் முழுவதையும் விளக்கிப் பின்னர் அச்சொற்றொடர்க்கு உள்ள விசேடத்தைப் பேசுவோமாக.

இச்செய்யுளுக்கு உரை பின் வருமாறு ஆகும்.

புவனம் பதினான்கையும் - பதினான்கு புவனங்களையும், பூத்தவளே - சிருட்டிக் கருத்தாவாகிய பிரமனுக்கு வாணியென்னுஞ் சத்தியாக இருந்து படைத்தவளே, பூத்தவண்ணம் - அப்புவனங்களைப் படைத்த வண்ணம், காத்தவளே - காப்புக் கடவுளாகிய விட்டுணு மூர்த்திக்குரிய சத்தியாகிய இலக்குமியாக இருந்து உயிர்களைக் காத்தவளே, பின் - காக்கவேண்டிய காலத்துக்குப் பிறகு, கரந்தவளே - சம்மாரகாரணனாகிய உருத்திரனுக்குச் சத்தியாகிய உமையாக இருந்து சங்கரித்தவளே, கறைக் கண்டனுக்கு - உருத்திரனுக்கு, மூத்தவளே - தோன்றுதற்கு முன்னாயிருப்பவளே, என்றும் - எக்காலத்தும், மூவா - கெடாத, முகுந்தற்கு - வீட்டினைத்தரும் சிவனுக்கு, இளையவளே - பின்தோன்றிய பராசத்தியே, மாத்தவளே - மிகவும் வெண்மையாகிய திருவுருவத்தை யுடையவளே, உன்னையன்றி - தேவரீரை யல்லாமல், மற்று ஓர் - வேறொரு, தெய்வம் - தெய்வத்தை, வந்திப்பதே - வணங்கத் தகுமோ, இல்லை என்பதாம். ஏகாரம் வினாப்பொருளின்கண் வந்தது. இல்லை யென்னும் பொருளைத் தந்ததாயிற்று.

இனி இச்செய்யுளைக் குறித்துச் சிறிது ஆராய்வோம்.

“சிவஞ்சத்தி நாதம் விந்து
சதாசிவன் றிகழுமீச
னுவந்த ருளுருத் திரன்றான்
மாலயனென்றினென்றாய்ப்

பலக் தருமருவ நாலிக்
குருவ நாலு பயமொன்று
நலங் தருபேத மேக
நாதனே நடிப்பனென்பர்.''

'' சத்தியாய் விந்துச் சத்தியாய்
மனோன்மணி தானுகி
யொத்தற மகேசை யாகி
யுமைதிரு வாணியாகி
வைத்துறுஞ் சிவாதிக் கிவ்வன்
வருஞ்சத்தி யொருத்தியாகு
மெத்திற னின்று னீச
னத்திற மவனுநிற்பன் ''

என்னுஞ் சிவஞான சித்தியார் திருவிருத்தங்களால் சிவபெருமான் ஒன்பது பேதங்களாக நடித்து வருகின்றனென்றும், அவ்விதம் நடிக்குங் காலத்து அவன் எவ்வெவ்வித உருவினனாக இருக்கின்றனோ, அவ்வவ்விதச் சத்திகளாய் பராசத்தி ஒருத்தியே இருப்பாளென்றும், கண்டோமாதலால் படைப்பைச் செய்வது அவளென்பது தோற்ற, 'பூத்தவளே' என்றும், அவ்விதமே ஆன்மாக்கள் மலபரிபாகம் வரும் பொருட்டு இருவினையோடு போராடுங் காலத்து வாழ்வதற்குரிய காத்தலைச் செய்கின்றாள் என்பது தோன்ற, 'காத்தவளே' என்றும், இவ்விதம் காக்கப்பட்ட உயிர்கள் இருவினையோடு போரிட்டு இளைக்குங் காலத்து, '' அழிப்பு இளைப்பாற்றல் '' என்றபடி, இளைப்பினை யாற்றும் பொருட்டு அழித்து நிற்கின்றாளாதலால், 'பின் கரந்தவளே' என்றும், மகேசன், சதாசிவன், சிவன் என்கின்ற மூர்த்தங்கள் தொழிலால் வேறுபட்டதாயினும் சிவன் ஒருவனே அதிட்டித்து நின்று செய்யும் தேவனாதலால் அவனில் தோன்றிய பராசக்தியைக் கூறுவார் வினை மகேசையையும், மனோன்மணியையும், கூறாது, 'கறைக்கண்டனுக்கு மூத்தவளே' என்றும் கூறினார். இவ்வாறு சகலருட்பட்டவராகிய பிரம விட்டுணுக்களையும், பிரளயாகலரில் பக்குவப் பட்டவனாய் முத்தியடைந்த சீகண்ட ருத்திரனையும், படைப்பாள் இவள் என்பது தோன்ற சம்மார காரணனுக்கு மூத்தவள் என்று அழைத்தாரேனும் சிவனிடத்தே தோன்றியவளாதலால், 'மூவா முகுந்தற் கிளையவளே' என்றுங் கூறினார். அன்றியும், பல மூர்த்தங்களை அதிட்டித்து நின்ற காலத்துப் பலவித நிறங்களையுடைய திருமேனிகளை யுடையவளாயினும், சத்தனுகிய பரமசிவனுக்குச் சத்தியாகிய பராசக்தியாய் உள்ள காலத்துத் தோன்றும் திருமேனி தாவள்ளியமாகிய திருமேனி என்று எடுத்துக் காட்டுவார், 'மாத்தவளே' என்றும் கூறினார். அன்றியும், இவ்வித மெய்புணர்ந்த இவ்வாசிரியர் அழிந்துபடுகின்ற வினைய தெய்வங்களை யெல்லாம் தொழுவது இருள் சேர்ந்த இருவினையையும் நீக்காது என்றும், அதனல் பொருள் சேர்ந்த புகழுடையளாய் இறைமைக் குணங்கள் யாவும் உடையளாய் உள்ள தேவியொருத்தியையே யான் தொழுவன். அவளே தனக்கு உவமை யில்லாதவள், அவளே சர்வ சம்மார காலத்து ஆண்டவனோடு தனித்து நிற்பவள், என்னும் பொருள்தர, 'உன்னையன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே' என்றனர். இக்கருத்துப் பற்றியன்றோ நமது மணிவாசகப் பெருந்தகையாரது,

'' தாதாய் மூவே ழுலகுக்குந்
தாயே நாயேன் றனையாண்ட
பேதாய் பிறவிப் பிணிக்கோர் மருந்தே
பெருந்தேன் பில்க வெப்போது
மேதாமணியே யென்றென் றேத்தி
யிரவும் பகலு மெழிலார் பாதப்
போதாய்த் தணைவதென்று கொல்லோ
வென்பொல்லா மணியைப் புணர்ந்தே''



'' காப்பாய் படைப்பாய் கரப்பாய் முழுதுங்
கண்ணோர் விசும்பின் விண்ணோர்க் கெல்
மூப்பாய் மூவா முதலாய் நின்ற [லா
முதல்வா முன்னே யெனையாண்ட
பாப்பானே யெம்பரமா வென்று
பாடிப் பாடிப் பணிந்து பாதப்
பூப்போதணைவ தென்று கொல்லோ
வென்பொல்லா மணியைப் புணர்ந்தே''

'' மின்னிடைச் செந்துவர்வாய்க் கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழி
என்னுடையா ரமுதெங் களப்ப [யீர்
னெம்பெருமா னிமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் றகப்பன்
றமையனெம் மையன் றாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே ''

'' தவளத்த நீறணியுந் தடந்தோ
ளண்ணறன் னொருபா
லவளத்த னுமக னுந்தில்லை
யானன் றுரித்ததன்ன
கவளத்த யானை கடிந்தார்
காத்தகண் ணார்தழையுந்
துவளத் தருவன வோசரும்
பார்குழற் றாமொழியே.''

என்னும் திருவாசகத் திருக்கோவைச் செய்யுட்க ளெழுந்தன. இப்பராசக்தியே படைத்தல், காத்தல், அழித்தல் செய்கின்ற மும்மூர்த்திகளுக்கும் முதல்வி யென்பதை எடுத்து உணர்த்துவதற்கே ஓதாதுணர்ந்த நம் குமரகுருபாரும் தமது மீனாக்ஷியம்மைப் பிள்ளைத் தமிழ்ச் செங்கீரைப் பருவத்தினுள்,

'' கற்று நெடுநேமிச் சுவர்க்கிசைய வெட்டுச் சுவர்க்கால் நிறுத்தி - மேருத்தூணென்று நடுநட்டு வெளிமுகடுமூடி இருசுடர் விளக்கிட்டு, முற்ற எற்றுப் புனலிற் கழுவு புவனப் பழங்கலம் எடுத்தடுக்கிப் - புதுக்கூழின் னமுதமும் சமைத்து அன்னை நீபன்முறை யிழைத்திட வழித்தழித்தோர், முற்றவெளியில் திரியும் மத்தப்பெரும் பித்தன் முன்னின்று தொந்தமிடவும் - முனியாது, வைகலும் வடுத்தடுக்கிப் பெரிய மூதண்டகூடமும், சிற்றில் விளையாடுமொரு பச்சிளம் பெண்பிள்ளை செங்கீரை யாடியருளே - தென்னற்கு மம்பொன்மலை மன்னற்கு மொருசெல்வி செங்கீரையாடி யருளே ''

என்று திருவருள் செய்தனர். அதுவன்றியும் வினையதொழில் கருத்தாக்கள் ஒழிந்த சர்வ சம்மாரகாலத்து இறைவனோடு தனித்து நிற்பவள் இவளே யென்பதை யுணர்த்துவதற்கு இக்குமரகுருபரரே,

'' கானவட் டத்தனிம னனைத்தொடுக் குத்தி காகனையும் விட்டு - ஒரெட்டு, காட்டத்தனும் பரமவீட் டத்தனும் அஞ்சுகனிருளிறைப்பண் அண்ட, கோனவட்டம் பழையகேமி வட்டத்தினொடு குப் புற்றுவெற் பெட்டுமெழ் - குட்டத்தினிற் கவிழ மூதண்ட வேதண்ட கோதண்டமோடு சக்ர, வானவட் டஞ்சுழல மட்டித்து நட்டமிடு மதுமத்தர் சுத்த சித்த - வட்டத்தி னுக்கிசைய நூற்றிக் கனத்ததன வட்டத்தை யொத்திட்ட தோர், தானவட்டம் கொட்டுகைப் பாணி யொப்பவொரு சப்பாணி கொட்டியருளே - தமிழொடு பிறந்தபழ மதுரையில் வளர்ந்தகொடி சப்பாணி கொட்டியருளே ''

என்று சப்பாணி பருவத்துள் விதந்து கூறினார். அன்றியும் பரம்பொருளாகிய சிவனுக்கு எக்காலத்தும் உற்ற துணையா யிருப்பவள் பரா சத்தியே யென்பார் நம் குமரகுருபரர் வருகைப் பருவத்துள்,

'' எறிதரங்கம் உடுக்கும் புவனங் கடந்து
நின்ற ஒருவன் திருவுள்ளத்தில்

18718

அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயி ரோவியமே"

என்றும், ஆணவ இருளை நீக்குவதற்கு மிக வெண்மையாகிய திருமேனியை யுடையாள் இவள் என்பது போதர,

"அகந்தைக் கிழங்கை யகழ்ந்து எடுக்கும்
தொழும்பர் உளக்கோயிற்கு ஏற்றும்
[விளக்கே"

என்றும் கூறினர். இவ்விதத் தகுதி வாய்ந்த இறைவியின் தன்மையை யறியாத புறமதத்தவர் பலவாறு கூறுவர்.

நவந்தரும் பேதமாக நடிக்கும் நாதனுக்குச் சத்தியாய் உள்ளவளைப் பராசத்தி என்று அழைப்பதே சாத்திர சம்மதமாம்.

பிறவி யென்னும் பெருங் கடலைத் தாண்டி முத்தியென்னுங் கரைசேர விரும்புவார் இறைவனுக்குச் சத்தியாகிய பராசக்தியையே தொழுதல் வேண்டும். அவ்விதம் தொழுவார்க்கே வேண்டுதல் வேண்டாமையாகிய இருவினை யொப்பும், அகந்தைக் கிழங்கை யகழ்ந்தெடுக்கும் மலபரிபாகமும், திடீரென வீழும் சத்திநிபாதமும் தோன்றி விரதம் முடிந்து ஞானந் தலைக் கூடி அவனடி சேர்தலாம் என்று உண்மை நெறி காட்டுவார், 'உன்னை யன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே' என்று உலகத்தார்க்கு முடித்துக் காட்டினர்.

ஆதலால் சைவ சித்தாந்தத்தை மேற்கொண்டு எவ்வுயிரையும் தம்முயிராகப் பார்க்கும் அந்தணத் தன்மை பூண்டு அப் பராசத்தியின் திருவருளால் வீட்டை யடைதற்கு முயலுவோமாக.

---

# நம்பியாரூரர் தேவாரம்

[E. N. தணிகாசல முதலியார், B. A., B. L.]

## 2. வன்றொண்டர் இசைத்தமிழ் ஏற்றம்

சுந்தரமூர்த்தி நாயனார் பாடலில் மயங்கிய சிவபெருமானார் சிலம்பொலி ஆலசியமானதும், * சேரமான் பெருமான் உடைவாளை யுருவித் தம் திருமார்பிற் பாய்ச்ச வெத்தனித்த போது, இவர் தற்கொலை செய்யா தொழியும் வண்ணம் பரமன் திருச்சிலம்பின் ஓசையை மிகவும் இசைப்பித்து, "வன்றொண்டன் ஒன்றுமுணர்வால் நமைப் போற்றி யுரைசேர் பதிகம் பாடுதலால், நின்று கேட்டு வரத் தாழ்த்தோம்" என்று அவ்வரசர் பெருமாற்கு அருளினரென்பது, பெரிய புராணத்திற் காணலாம். திரேதா யுகத்திலிருந்த நவ வியாகரண

* சேரமான் பெருமாணயனார் புராணம். (41-45-பாடல்கள்)



பண்டிதனான இராவணன், கயிலாயமலையடியில் நசுங்குண்ட பின்னர், பரம்பொருளை வசஞ் செய்யும் இன்னிசை பாடி யருள் பெற்றதைத் திருநாவுக்கரசர் (ஒவ்வொரு) * பதிகத்தின் இறுதியிலும், திருஞான சம்பந்தர் பதிகங்களில் 8-ம் பாசுரங்களிலும் காண்கின்றோம். நம்பியாரூரர் இசையோ அவ்விராணன் சாமவேத கானத்தினும் சிறந்த தென்பதற்குப் பல அத்தாட்சிகள் உள. இவையன்றி இவ்விசைத் தமிழன்றோ, தொண்டர் நாதனைப் பரவை நாச்சியாரிடம் இருமுறை தூது போகச் செய்தது?

சுந்தரர் பாடலுக்குச் சிவபெருமான் அஞ்சுவது அடியிற் குறித்த பாசுரத்தால் அநுமானிக்கலாம் :—

"மண்ணுலகும் விண்ணுலகு
மும்மதே யாட்சி ;
மலையரையன் பொற்பாவை
சிறுவனையுந் தேரேன்
எண்ணிலியுண் பெருவயிறன்
கணபதியொன் றறியான்
எம்பெருமா னிதுதகவோ ?
இயம்பியருள் செய்வீர் !
திண்ணனவே னுடல்விருத்தி
தாரீரே யாகில்,
திருமேனி வருந்தவே
வளைக்கின்றே னுனைக்
கண்ணறையன் கொடும்பாடன்
என்றுரைக்க வேண்டாம்
கடனாகைக் காரோண
மேவியிருந் தீரே."

—திருநாகைக் காரோணத் திருப்பதிகம் - 9.

"* அத்தன்மையனுய விராவணனுக்
கருளுங் கருணைத் திறமானவதன்
மெய்த்தன்மை யறிந்து துதிப்பது
மேல்கொண்டு வணங்கினர் மெய்யுறவே"

—பெரிய புராணம். திருநின்ற சருக்கம் 75.

நம்பியாரூரர் நல்லிசைக்கு அடிப்படை யாது? இஃது ஆராய்ச்சிக்கு எட்டா விஷயமாயினும் இயன்ற அளவு பரிசோதிப்போமாக :— முத்தமிழில் இசைத் தமிழே * ஏனைய தமிழின் சனன பூமி யென்னலாம். இதனாலேயே தமிழ் என்னும் பதம் இனிமை யென்னும் பொருள் பெற்றதுபோலும்? ஞான விளக்கொளியான நாதன், † நாதமும்,

* பண்ணிடைத் தமிழொப்பாய் !
பழத்தினிற் சுவையொப்பாய் !
கண்ணிடை மணியொப்பாய் !
கடுவிருட் சுடரொப்பாய் !
மண்ணிடை யடியார்கண்
மனத்திடர் வாராமே,
விண்ணிடை குருகாவூர்
வெள்ளடை நீயன்றே ?

—திருக்குருகாவூர் வெள்ளடை.

பண் - நட்டராகம் - 6.

[குறிப்பு :— தமிழிடைப் பண்ணென்னாமல், "பண்ணிடைத் தமிழ்" என்பதை நோக்குக.]

† நாதனை நாதமித்துத்
தோகைய தானவனை
ஞானவி ளக்கொளியாம்
ஊனுயி ரைப்பயிரை
மாதனை மேதகுதன்
பத்தர்ம னத்திறையும்
பற்றுவி டாதவனைக்
குற்றமில் கொள்கையனைத்
தூதனை யென்றனையாள்
தோழனை, நாயகனைத்
தாழ்மக ரக்குழையுந்
தோடும ணிந்ததிருக்
காதனை, நாயடியே
னெய்துவ தென்றுகொலோ ?
கார்வயல் சூழ்கானப்
பேருறை காளையையே.

—திருக்கானப்பேர். பண் - புறநீர்மை - 9.

அதனுலுண்டாகும் ஓசையுமாவன் என்பர் மேலோர். பரமன் மொழி யின்னிசையென்று தேவாரம் கூறும். செந்தமிழறிவே, இன்னிசை ஞானமாம் அவ்விசையால் தாமத குணமுள்ள * சந்துக்களையும் அடக்கக் கூடுமென்பர். இவ்விசை பல நாட்களுக்கு முன்னர் முதலையுண்ட பாலனைத் தருவித்ததென்ருல், இதனுலாகாத காரியம் உண்டோ? இது அறிவியல் நூற்களுக்குச் சித்தாந்தமாமோ எனின், ஆம் என்னவே தற்கால பரமாணுக்களின் ஆராய்ச்சிகளும் மேல்நாட்டு வாயிலாகவும் விளக்கும். இவ்வுலகத்தில் அணுக்களினிடையே சென்று பற்பல வசியகாரியங்களைச் செய்யக்கூடியது இசையின் சக்தியென்பது ஐரோப்பியரும் இக்காலத்திலறியலானுர். இசைக் கருவியில் சிறந்ததான வீணை யொலியாலே, பரம்பொருள் பிரளய காலத்தில் † ஒடுங்கும் இயற்கையை மீளச்செய்வாரென்று அப்பர் கூறுவார். அங்ஙனமே, எழு நரம்பின் * (சத்து) இலக்கணத்தை நம்பியாரூரரும் ஒருவாறு குறித்துக் காட்டுகின்றனர்.

இவற்றை யெல்லாம் நிதானித்து நோக்குமளவில் நம்பியாரூரர் இசைத் தமிழ், பரம்பொருள் மொழியையே கைப்பற்றி வெளியிடப்பட்ட தென்றும் அது சட்ட வடிவான நீதியொழுங்கு எங்கும் தவறுததென்றும், அதனிலக்கணம் இயற்றமிழ், இலக்கணத்திலும் மேன்மையான தென்றும், இதன் நுட்பம் செவ்வனே யறிவோமாயின், பஞ்ச பூதங்களையும் ஏவல் கொள்ளலா மென்றும் அநுமானிக்கலாம். இவ்விசை, குழலினும், யாழினும் மாத்திரமன்று மற்றுமுள்ள பல கருவி வாயிலாகவும் சிவபெருமான் வெளிப்

* செந்தமிழ்த்திறம் வல்லிரோ ?
செங்கணாவழன் கையிலாடவே,
வந்துநிற்குமீ தென்கொலோ ?
பலிமாற்ற மாட்டோ மிடுகிலோம்
பைந்தண் மாமலருந்து சோலைகள்
கந்தநாறு பைஞ்ஞீலியீர் !
அந்திவானமு மேனியோ ?
சொலுமாரணீய விடங்கரே !
—திருப்பைஞ்ஞீலி. பண் - கொல்லி. - 4.

i † பெருங்கடன் மூடிப் பிரளயங் கொண்டு
பிரமனும் போய்
இருங்கடன் மூடி யிறக்கு
மிறந்தான் களேபரமுங்
கருங்கடல் வண்ணன் களேபரமுங்
கொண்டு கங்காளராய்
வருங்கடல் மீளநின் றெம்மிறை
நல்வீணை வாசிக்குமே.
அப்பர்—தனித்திருவிருத்தம். 7.

(ii) ஏழுகொலா மவரூழி படைத்தன
ஏழுகொ லாமவர் கண்டவிருங்கடல்
ஏழுகொலாமவ ராளு முலகங்கள்
ஏழுகொ லாமிசை யாக்கின தாமே.
அப்பர்—விடந்தீர்த்த பதிகம் - 7.

* (i) சூழொளி நீர்நிலந்தீத்
தாழ்வளி யாகாசம்
வானுயர் வெங்கதிரோன்
வண்டமிழ் வல்லவர்கள்
ஏழிசை யேழ்நரம்பின்
ஓசையை ஆரூர்புக்
கேழுல காளியைநான்
என்றுகொ லெய்துவதே.
திருவாரூர்—பண் - புறநீர்மை. 6.

(ii) ஏழிசையா யிசைப்பயனா
யின்னமுதா யென்னுடைய
தோழனுமா யான்செய்யும்
துரிசகளுக் குடனுகி
மாழையொண்கண் பரவையைத்தந்
தாண்டானை மதியிலா
ஏழையேன் பிரிந்திருக்கேன்
என்னாரூர் இறைவனையே.
—ஷை பழம் பஞ்சரம் - 10.



* படுத்தினரென்றும், அவ்விசைப் பாடலும், திருநடனமும், உலகத்திலுள்ள துயர் அற்றுப்போம் வண்ணமியல்கின்றன † வென்றும், நம்பியாரூரர் குறித்துக் காட்டுகின்றனர். இவ்விசையின் அந்தரங்க ஆராய்ச்சியாலே அவர் கொன்றையின் வண்டொலி யாழின் ‡ இசைக்கு ஒப்பிடக் கூடிய தன்மையையும் மொழிகின்றனர்.

சுந்தரமூர்த்தி நாயனுர், தாம் கவித்திறமை யில்லாதவரென்றும், பாடிய தம் பாக்கள் யாவும் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் பாடியவற்றையே மீண்டும் எடுத்துப் பாடியதாகவும், தமக்குச் சந்தம் வரை யறுக்கும் திறனில்லையென்றும், தாம் கல்வி, கலைஞானம் யாதும் பெறவில்லையென்றும்* இன்னும் எவ்வெவ் விதமாய்த் தம்மைத்தாம் பழிக்கக்கூடுமோ அவ்வளவும் அவர் தேவாரங்களில் ஆங்காங்கு மொழிகின்றனர். தம்மைத்தாம் பழித்தல் இத்தகைய பெருமக்கள் இயல்பாதலால் அவற்றை நாமும் பழியாமல், அவர்

* தக்கைதண் ணுமை, தாளம், வீணை,
தகுணிச் சங்கிணை, சல்லரி
கொக்கரை, குட முழவிஞேடிசை
கூடப் பாடிநின் ருடுவீர்,
பக்கமே குயில் பாடும் சோலைப்
பைஞ்ஞீலி யேனென்று நிற்றி
அக்கு மாமையும் பூண்டிரோ ? [ரால்
சொலு மாரணீய விடங்கரே !
—திருப்பைஞ்ஞீலி. பண் - கொல்லி - 9.

† குடமெடுத்து நீரும் பூவுங்கொண்டு
தொண்ட ரேவல் செய்ய
நடமெடுத் தோன்றுடிப்பாடி நல்குவீர்!
நீர் புல்கும் வண்ணம்
வடமெடுத்த கொங்கை மாதோர்
பாகமாக வார்க டல்வாய்
விடமி டற்றில் வைத்த தென்னே ?
வேலைசூழ் வெண் காடனீரே !
—திருவெண்காடு. பண் - இந்தளம் - 5.

‡ செறிவுண் டேன்மனத்
தாற்றெளி வுண்டேல்,
தேற்றத் தால்வருஞ்
சிக்கன வுண்டேல்,
மறிவுண் டேன்மறு
மைப்பிறப் புண்டேல்,
வாணுண் மேற்செல்லும்
வஞ்சனை யுண்டேல்,
பொறிவண் டியாழ்செய்யும்
பொன்மலர்க் கொன்றை
பொன்போ லுஞ்சடை
மேற்புனைந் தானை
அறிவுண் டேயுட
லத்துயி ருண்டே
யாரு ரானைம
றக்கலு மாமே ?
—திருவாரூர். பண் - தக்கேசி - 5.

(i) * " கூடுமா றுள்ளன கூடியும் கோத்தும்
கொய்புன லேனலோ டைவனம் சிதறி
மாடுமா கோங்கமே மருதமே பொருது
மலையெனக் குலைகளை மறிக்குமா றுந்தி
ஓடுமா காவிரி துருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் செடியனேன்
[நாயேன்
பாடுமா றறிகில னெம்பெரு மானைப்
பழவினை யுள்ளன பற்றறுத் தானை "
—திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும். 2.

(ii) பாடுமா பாடிப்
பணியுமா றறியேன்
பனுவுமா பனுவிப்
பரவுமா றறியேன்
தேடுமா தேடித்
திருத்துமா றறியேன்
செல்லுமா செல்லச்
செலுத்துமா றறியேன்
" கூடுமா றெங்ஙன
மோ ?" வென்றுகூறக்
குறித்துக் காட்டிக்
கொணர்ந்தெனை யாண்டு

தூய்மை விளக்கமென்றே எண்ணக் கடவோமாக.

வன்றொண்டர் இசைப் புலமையில் நிகற்றவரென்பதற்கு அவர் தேவாரப் பண்களே சாட்சியாகும். இவையன்றியும் அவரையும் அறியாமல் அவர் திருவாய் மலர்ந்தருளிய அகச்சான்றுகளும் பல உள. அவர், கல்வியின் இன்பம் * நன்குணர்ந்த மாணவரென்றும், சந்தம் பல † பாடுபவரென்றும், அவர் பதிகங்கள் ‡ கரும்பின் சுவைபோல் ஏழிசையும் கூடியனவென்றும் தம்மை மறந்த காலங்களில் மொழிந்தனர். பண்ணார்ந்த

---

வாடிநீ வாளா
வருந்தலென் பானை
வலிவலம் தன்னில்
வந்துகண் டேனே.
—திருவலிவலம் பண் - தக்கேசி. 6.

சந்தம் பலவறுக்கில்லேன் சார்ந்தவர்
தம்மடிச் சாரேன்
முந்திப் பொருவிடை யேறி
மூவுல குந்திரி வானே
கந்தங் கமழ்கொன்றை மாலைக்
கண்ணியன் விண்ணவரேத்தும்
எந்தை யிருப்பது மாரூர்
அவரெம்மையு மாள்வரோகேளீர் ?
—திருவாரூர் பண் - காந்தாரம். 7.

குற்றம் தன்னொடு
குணம்பல பெருக்கிக்
கோல நுண்ணிடை
யாரொடு மயங்கிக்
கற்றி லேன்கலை
கள்பல ஞானம்
கடிய வாயின
கொடுமைகள் செய்தேன்
பற்ற லாவதோர்
பற்றுமற் றில்லேன்
பாவி யேன்பல
பாவங்கள் செய்தேன்
எற்று ளேனெனக்
குய்வகை யருளாய்
இடைம ருதுறை
யெந்தைபி ரானே !
—திருவிடை மருதூர் பண் - தக்கேசி. 6.

* குற்ற மொன்றடி யாரிலராகில்
கூடுமாறத னைக்கொடுப் பானைக்
கற்ற கல்வியி லும்மினி யானை,
காணப் பேணும வர்க்கெளி யானை,
முற்ற வஞ்சம் துறந்திருப் பானை,
மூவரின்முத லாயவன் றன்னை,
சுற்று நீள்வயல் சூழ்திரு நீடூர்த்
தோன்ற லைப்பணி யாவிட லாமே?
—திருநீடூர். பண் - தக்கேசி - 5.

† செந்தண் பவளந் திகழுஞ்
சோலை யிதுவோ திருவாரூர் ?
எந்தம் மடிகேள் ! இதுவே யாமா
றுமக்காட் பட்டோர்க்குச்
சந்தம் பலவும் பாடு மடியார்
தங்கண் காணது
வந்தேம் " பெருமான் முறையோ "
வென்றால், வாழ்ந்து போதீரே !
—திருவாரூர். பண் - செந்துருத்தி - 5.

‡ ஊழிதொ றூழிமுற்று முயர்
பொன்னொடித் தான் மலையைச்
சூழிசை யின்கரும்பின் சுவை
நாவல வூரன் சொன்ன
ஏழிசை யின்றமிழா லிசைந்
தேத்திய பத்தினையும்
ஆழி கடலரையா வஞ்சை
யப்பர்க் கறிவிப்பதே
—திருநொடித்தான்மலை.
பண் - பஞ்சமம் - 10.



" இன்றமிழே " * பரஞ் சுடரெனப் பணிந்தனர். பாட்டகத்துள்ள இசையே பத்தர் சித்தப் பரிவாகிய முக்கண் அண்ணலென்றார். † இங்ஙனம் இசையுணர்ந்தவர் எத்தேசத்தேனும், எப்பாஷையிலேனும், எக்காலத்திலேனும் உளரோ ?

---

## சைவசித்தாந்த மகாசமாஜம்

இச்சமாஜத்தின் பிப்ரவரிமீ்க் கூட்டம் வெகுச் சிறப்பாக மயிலாப்பூரில் பிராடீஸ் ரோட் 60ம் எண்ணுள்ள சிவக்கியானம் என்னும் மாளிகையில் 4-2-28 சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு Sir. T. N. சிவஞானம் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருக்குறள் விளக்க ஆசிரியர் திரு. கி. குப்புசாமி முதலியார், " ஐந்தெழுத்துண்மை " என்பதுபற்றித் தேவாரம் திருவாசகம் சிவஞான போதம் முதலிய நூல்களிலிருந்து பல மேற்கோள்களோடு மிகத் தெளிவாக ஒரு அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர். பிறகு மகாமகோபாத்யாய திரு. உ. வே. சாமிநாதையர் " பண்ணேனுனக்கான பூசை " என்னும் தாயுமானவர் திருவிருத்தத்தில் உள்ள ஒவ்வொரு சொல்லையும் எடுத்து அதில் பதிந்துள்ள பல அரிய பொருள்களை மிகச் சாமர்த்தியமாக இனிது விளக்கினர். பின்னர்த் திருப்புகழ் மணி T. M. கிருஷ்ணசாமி அய்யர், பக்திமாலை ஆசிரியர் S. அனந்தராம ஐயர் முதலிய மயிலாப்பூர் அடியார்களால் திருப்புகழ்ப் பாராயணம் உள்ளத்தைக் கவருமாறு மிக உருக்கத்துடனும் பணிவுடனும் நடைபெற்றது. பிறகு தலைவர் மிகச் சுருக்கமான முடிபுரையில் திருப்புகழ்ப் பாராயணத்தை விதந்து கூறி அது தம்மை உருக்கிய வகையைக் காட்டி நிகழ்ந்த சொற்பொழிவுகளில் தமக்கு அரியனவாகத் தோன்றிய பொருள்களை வற்புறுத்திக் கூறினார்கள்.

புதிய விதிகளில் தெளிவுக்கான இரண்டு திருத்தங்கள் நிறைவேறின. பல அன்பர்கள் " சித்தாந்தம் " பத்திரிகைக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்தனர். அனைவரும் " சித்தாந்தம் " மீண்டும் வெளி வருவதைப் பாராட்டி மகிழ்ந்து இயன்ற வகையில் உதவி புரிவதாக மிக ஆர்வத்தோடு தெரிவித்தனர். தலைவர், சொற்பொழிவு நிகழ்த்திய பேரறிஞர், பாராயணம் செய்த திருப்புகழடியார்கள், கூட்டத்தை நடத்திக் கொடுத்த திரு. P. S. ஐயாமுதலியாரவர்கள் ஆகிய இப்பேரன்புடையோருக்கும் ஏனையோருக்கும் நன்றி கூறப்பட்டு, கடவுள் வாழ்த்துடன் சபை கலைந்தது.

ம. பாலசுப்பிரமணியம்,
காரியதரிசி.

இச்சமாஜத்தின் மார்ச்சுமீ க் கூட்டம் சென்னை நுங்கம் பாக்கம் ஹைரோட்டில் 18-3-1928 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-மணிக்கு சுப்பிரமணியர் ஆலயத்தில் நடைபெறும். திரு. வி. உலகநாத முதலியார் அவர்கள் "நந்தனார் " என்பது பற்றியும், திருவாளர் - அ. சிவசங்கர முதலியாரவர்கள் " சமயம் " என்பது பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள். அனைவரும் வந்து கேட்டு இன்புறுக.

ம. பாலசுப்பிரமணியம்,
காரியதரிசி,

---

* கண்ணு யேழுலகுங் கருத்
தாய வருத்தமுமாய்ப்
பண்ணா ரின்தமிழாய்ப்
பரமாய பரஞ்சுடரே !
மண்ணார் பூம்பொழில்சூழ்
மழபாடியுள் மாணிக்கமே !
அண்ணா ! நின்னையல்லா லினி
யாரை நினைக்கேனே ?
—திருமழப்பாடி. பண் - நட்டராகம் - 5.

† பாட்ட கத்திசை யாகிநின் றானைப்
பத்தர் சித்தம்பரிவினி யானை
நாட்டகத் தேவர் செய்கையு ளானை,
நட்ட மாடியை நம்பெரு மானை,
காட்டகத் துறு புலியுரி யானைக் [யேன்
கண்ணோர் மூன்றுடை யண்ணலை நீடி
கோட்டகப் புனலார் செழுங் கழனிக்
கோலக்கா வினிற் கண்டுகொண் டேனே.
—திருக்கோலக்கா. பண் - தக்கேசி - 3.

# ‘சித்தாந்தம்’

(வாழ்த்து)

நன்னர் ஞாலம் ஞயம்பெறத் திருநெறி
துன்னிய விளக்குந் தூஉய கலைஞ
வித்தா ரணிபுகல் சித்தாந்த சார
பற்பக லெனக்குப் பார்வயி னறவகை
சொற்பல பகர்ந்து தூசகற் றிணையால்
சிலபகல் கரந்துமென் றிருந்தகத் திரீஇ,
யீண்டு நாவுக் கரையமால் நீட்டுங்
காண்டகு மதுரக் கட்டுரைப் பொழிவொடுந்
தவமார் தலைவர் சிவசண் முகமெய்ஞ்
ஞான தேசிகர் மான வுருவொடும்
யான்களி கொள்ளப் பாங்கினி லென்கட்
டோன்றினை, மகிழ்ந்தனன் ; றுறையின்
மலியநின் வான்புகழ் நிலீயர் மன்னே.

சித்தாந்த ஞானத் திறத்து வகையனைத்து
முத்தாந்த மாக முறைநவின்று - வித்தாக
வித்தா ரணிமா னியங்க வருள்புரியுஞ்
சத்தாநின் றாளே சதிர்.

வித்துவான்
ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை.

சென்னை-600 005.

# மதிப்புரை

"**ஜீவகாருண்ய விளக்க வினாவிடை**" இது சைவத்திருவாளர் காவித்தண்டலம் வேதாசல முதலியார் அவர்களால் எளிய நடையில் மிகத் தெளிவாகப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளும் உணரும்படி 63 சாத்திரங்களிலிருந்து பல மேற்கோள்களோடு சீவகாருண்ய ஒழுக்கத்தின் சிறப்பைப் பல பகுதிகளாக விளக்கி எழுதப்பட்டுள்ளது. Sir. T. N. சிவஞானம் பிள்ளை, பல சைவப் பேரறிஞர்கள் இந்நூலுக்கு முன்னுரை, மதிப்புரைகள் அளித்துள்ளார். பள்ளிக்கூடத்தில் பாடமாக வைப்பதற்குரிய நூல் என்று துரைத்தனத்தாருக்கும், பாவச்செய்தற்குரியது என்று புலால் மறுத்தல் சங்கத்தாருக்கும் அறிவிக்க விரும்புகிறோம். இந்நூல் வேண்டுவோர் காவித்தண்டலம் கிராமம், சாலவாக்கம் போஸ்ட், செங்கல்பட்டு ஜில்லா என்ற ஆசிரியர் விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

"**சுத்தசாதகம் - உண்மை முத்திநிலை**" இதில் குமாரதேவ வள்ளலார் 'சுத்தசாதகத்தோடு யாழ்ப்பாணம் ச. சந்தைய பிள்ளையவர்கள் எழுதிய 'உண்மை முத்திநிலை' என்னும் கட்டுரையும் சேர்ந்துளது. பதிப்பித்தோர் புதுவை நந்தி வெளியீட்டு மன்றத்தார். இது பெரும்பான்மை ஐக்கிய வாதத்தைத் தழுவி எழுதப்பட்டுள்ளது.

"**உண்மை முத்திநிலை ஆராய்ச்சி**" இது மேற்கண்ட நூலை ஆராய்ச்சி செய்து தூத்துக்குடி திரு. பொ. முத்தைய பிள்ளையவர்கள் எழுதிய கட்டுரை. விலை அணா ஒன்று. வேண்டுவோர் சிவாகமசங்கம், தேவகோட்டை என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். இவ்விரண்டு நூல்களும் நம்பார்வைக்கு வந்தன. பெரும்பான்மை திரு. முத்தைய பிள்ளையவர்கள் எழுதியுள்ளவை நம் கருத்துக்களுக்கும் சைவசித்தாந்தத்துக்கும் ஒத்திருக்கின்றன என்பதைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

"**திராவிட வேதத்திரட்டு**" இது கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் B. A., அவர்களால் திரட்டப்பட்டது. பாடல் பெற்ற தலம் ஒவ்வொன்றுக்கும் தேவாரமும், பன்னிரு திருமுறைகளிலிருந்து அரிய பாடல்களும், தலயாத்திரைக்குரிய குறிப்புகளும் முருகன் புகழ் நூல்களின் செய்யுட்களும் அடங்கியுள்ளன. மிகச் சிறந்த நூல்; சைவர்கள் வாங்குதற்குரியது. வேண்டுவோர் அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூருக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம். விலை ரூபா மூன்றரை.

மா. பாலசுப்பிரமணியன்,
காரியதரிசி.

'**Veerashaiva Philosophy**' by S. D. Pawate, Vakil, Hubli; Published by W. B. Bileangadi, Pleader, Hubli; Price One Rupee. This very valuable book consists of two parts with several useful appendices. Part one contains

a learned disquisition on the Agamas and their importance for philosophical study. It is very refreshing to go through the sanskrit slokas which the author has printed side by side from the Bagavad-Gita and the Parameshwara Agama and other Agamas to show the identity of not merely the ideas but of the expression itself used by Sri Krishna. A comparative study, like the one furnished, when made in the true religious spirit is sure to make one see the barriers of religious systems fade before him. The second part is a paper read by the author at the Universal Religious Conference held at Madras in 1923. It gives a bird's eyeview of the Veerasaiva system of Sri Basawa with profuse quotations from the shaiva-agamas. A careful study of it shows how in most essentials and in many details the Veerasaiva system is identical with the Saiva Siddhanta system, based as both are on the Agamas. Books like the one under review for other religious systems as well are a long felt want. We have very great pleasure in commending this book for the careful study of all sincere seekers after Truth.

M. BALASUBRAHMANYAM,
*Hon. Secretary.*

---

| | | | |
|---|---|---|---|
| வருட் சந்தா | ரூ. | 1-8-0. | தபாற்கூலி இல்லை. |
| வெளிநாடு | ,, | 2-0-0. | |

**விளம்பர விகிதம்**

| | | | | |
|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ. | 10 | 0 | 0 |
| அரைப்பக்கம் | ,, | 5 | 0 | 0 |
| கால்பக்கம் | ,, | 3 | 0 | 0 |

---

'ஆதி வாழிய அஞ்செழுத் தோடுவெண்
பூதி வாழிய புண்ணியர் வாழிய
நீதி வாழிய நீள்புவி வாழிய
கோதில் சைவக் குலமிக வாழியே.'

---

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah.
Edited and Published by Mani Thirunavukkarasu Mudaliar for the Saiva Siddhanta Maha Samajam.